ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பிள்ளைலோகாசார்யர் கடாக்ஷத்துக்குப்
பாத்ரபூதரான
விளாஞ்சோலைப்பிள்ளை அருளிச்செய்த

# ஸப்தகாதை

மூலமும்—பதவுரையும்
பிள்ளைலோகஞ் ஜீயரருளிச்செய்த
வ்யாக்யாநமும்.

---

இஃது
திருவழுந்தூர்
ஸ்ரீமாந்,
உ.வே. சடகோபராமாநுஜாசாரியரால்
பரிசோதிக்கப்பட்டு
கோயில்கந்தாடை அண்ணன் ஸ்வாமிகளின்
திருவடி ஸம்பந்தியும்
ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாய புஸ்தகசாலாதிகாரியுமாகிய
கா. வெ. திருக்கச்சிநம்பி தாஸரால்

சென்னை ஆனந்தா பிரஸ்ஸில் பதிப்பிக்கப்பட்டது.

1906.

இதன்விலை அணா ௪.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

சென்னை திருவல்லிக்கேணி துளசிங்கப்பெருமாள் கோயில் தெருவு 36-வது கதவிலக்கமுள்ள இடத்தில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ சம்ப்ரதாய புஸ்தக சாலையில் கிடைக்கும் ஸ்ரீகோசங்கள்.

## தமிழ் ஸ்ரீகோசங்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| குருபரம்பரை ஆறுயிரப்படி ..... ..... | ௨ | 0 | 0 |
| யதீந்த்ரப்ரவணப்ரபாவம் ..... ..... | ௧ | 0 | 0 |
| ஷை இரண்டுஞ்சேர்ந்து ஒரே கட்டடம் ..... | ௩ | 0 | 0 |
| குருபரம்பரை மூவாயிரப்படி ..... ..... | 0 | ௧௨ | 0 |
| நாலாயிர திவ்யப்ரபந்தம் ..... ..... | ௨ | 0 | 0 |
| விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம் .... | 0 | ௧௨ | 0 |
| ஷை காயித கவர் ..... ..... ..... | 0 | ௧0 | 0 |
| திருக்கச்சிநம்பி ப்ரபாவம் ..... ..... | 0 | ௪ | 0 |
| சரமோபாய நிர்ணயம் ..... ..... ..... | 0 | ௪ | 0 |

022:417x
D6

இங்ஙனம்:

கா. வெ. திருக்கச்சிநம்பிதாஸன்,

ஸ்ரீவைஷ்ணவசம்பிரதாய புஸ்தகசாலை,

திருவல்லிக்கேணி.

ஸ்ரீ



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

---

விளாஞ்சோலைப்பிள்ளை அருளிச்செய்த

# ஸப்தகாதை.

---

## தனியன்.

வாழிநலந்திகழுநாரணதாதனருள்
வாழியவனமுதவாய்மொழிகள் - வாழியே
ஏறுதிருவுடையானெந்தையுலகாரியன்சொல்
தேறுதிருவுடையான்சீர்.

---

பிள்ளைலோகஞ்சீயரருளிச் செய்த வ்யாக்யாநம்.

அவதாரிகை.—*உலகங்கட்கெல்லா மோருபிரான திருவரங்கச் செல்வனார்க்குங்கூட "ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்'

(ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்) என்கிற திருமுகப்படியே-மிகவும்தாரகராய்க்கொண்டு, அனைவரு முஜ்ஜீவிக்கும்படி *அத்திகிரியருளாள ரனுமதிமுன்னாக ப்ரபந்தீகரித்தருளின ஸ்ரீவசநபூஷண ப்ரமுக நிகிலரஹஸ்யக்ரந்தமுகேந சரமப்ரமாணப்ரமேய ப்ரமாத்ர் வைபவங்களை ஸப்ரகாரமாகவும் ப்ரகாசிப்பித்தருளின பிள்ளைலோகாசார்யருடைய திருவடிகளிலே ஆச்ரயித்து; அவதாரவிசேஷமான அவருடைய விசேஷகடாக்ஷத்தாலே, * தொண்டர்க்கமுதுண்ணச்சொன்மாலையான திருவாய்மொழியையும், அதுக்கு அங்கோபாங்கங்களான * இருந்தமிழ்நூற்புலவர் பனுவல்களையும், மற்ற எண்மர் * நன்மாலைகளையும், பிள்ளான்முதலானோர் செய்தருளும் தத்தத்வ்யாக்யாநங்களையும், அவற்றின் தாத்பர்யார்த்தங்களுக்கும் சப்தரஸ அர்த்தரஸ பாவரஸங்களுக்கும் ஸ்வாபதேசாதிகளுக்கும் நேர் ப்ரகாசகங்களான விசேஷரஹஸ்யங்களையும், ஸார்த்தமாக ஸம்சய விபர்யயமற அடைவே யதிகரிக்கப்பெற்றுக்ர்தார்த்தராய்; உடையவர்க்குப் பிள்ளையுறங்காவில்லிதாஸரைப்போலவும், நம்பிள்ளைக்கு ஏறுதிருவுடையான் தாஸரைப்போலவும், நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டர்க்கு பிள்ளைவானமாமலைதாஸரைப்போலவும், பிள்ளைலோகாசார்யர்க்கு ஆத்மஸமராயும், ப்ராணஸமராயும், த்ர்ஷ்டிஸமராயும், பாஹு ஸமராயும், ஆபரணஸமராயும், பாதஸமராயும், பா

தரேகாஸமராயும், பாதச்சாயாஸமராயும், பாதுகாஸமராயும், பாதோபதாநஸமராயும் எழுந்தருளியிருக்குமவராய்; ப்ரம்சஸம்பாவனை யில்லாத உத்க்ர்ஷ்டஜந்மத்திலே அவதரிக்கப் பெறுகையாலே ஸஹஜதாஸ்யத்தையுடையராய்; "தீதற்றஞானத் திருவாய்மொழிப் பிள்ளை" என்னும்படி ஸமஸ்தசாஸ்த்ரபாரங்கதராயும் ஸர்வஜ்ஞராயும் பெருமதிப்பராயும் போருகிற திருவாய்மொழிப் பிள்ளையுங் கூடத் தம்மருகேசென்று சரமார்த்தவிசேஷங்களைக் கேட்டுப்போரும்படி மிகவும் ஸர்வஜ்ஞராய், "வாழிநலந் திகழு நாரணதாதன்" என்று - யாகாநுயாகோத்ர வேதிகளில் காயாந்த ஸ்தலசுத்திபண்ணின (க) சுத்தவ்ர்த்தாசாரமறியும் பெரியோர்களாலே ஸர்வகாலமும் போற்றப்படுமவராய்; ஸ்வாசார்யரான பிள்ளைலோகாசார்யர் தம்முடைய சரமதசையிலே "சரீராவஸாநகாலத்தளவும் நீர் திருவநந்த புரத்தேயிரும்" என்று நியமித்தருளுகையாலே, அவர் நியமித்தருளினபடியே அங்கேசென்று, "நடமினோநமர்களுள்ளீர்" என்கிற ஆழ்வாருடைய நியமநத்திலே அந்தர்ப்பூதரானவர்களில் தாம் ப்ரதாநரென்னும் வாசிதோற்ற *படமுடையரவிற் பள்ளிபயின்றவன்

---

(க) சுத்தவ்ர்த்தாசாரம் - சுத்தராயிருக்கும் பெரியோர்களின் அநுஷ்டாநம்.

பாதம்பணிந்து, த்வாரத்ரயத்தாலும் முகநாபிபாதங்களை முகமாகவும் ஸநாபியாகவும் அடிப்பாடாகவும் அடைவே யநுபவித்து, *வாசமேகமழுஞ் சோலையான புறச்சோலைக்குள்ளே (க) விவிக்தமாயிருப்பதொரு ப்ரதேசவிசேஷத்திலே சென்று, "గురుపాదాంబుజంధ్యాయేత్" (குருபாதாம்புஜம்த்யாயேத்) என்றும், "విగ్రహాలోకనపరః" (விக்ரஹாலோகநபரః) என்று, "శ్రీలోకార్యముఖారవిన్దమఖిలశ్రుత్యర్థకోశం సతాం తాంగోష్ఠీఞ్చ తదేకలీనమనసా సంచిన్తయన్తం సదా" (ஸ்ரீலோகார்யமுகாரவிந்த மகிலச்ருத்யர்த கோசம்ஸதாம் தாம்கோஷ்டீஞ்ச ததேகலீநமநஸாஸஞ்சிந்தயந்தம்ஸதா) என்றுஞ் சொல்லுகிறபடியே-*தேமருவுஞ் செங்கமலத் திருத்தாள்களும். திகழும்வான்பட்டாடைபதிந்த திருமருங்கும், முப்புரி நூலின் தாமமணிவடமமர்ந்த திருமார்பும், முன்னவர் தந்தருள் மொழிகள் நிறைந்த திருமுறுவலும், கருணை பொழிந்திடு மிணைக்கண்களும், கநநல்ல சிகைமுடியும், திங்கள்போலும் திருநுதலும்,* திருக்கண்ணும் செவ்வாயும் பொங்கொளிசேர்பொன்மொழியும் புரிநூலும்பொற்றோளும் மங்கலமான மலர்மார்பும் மணிவடமும் மருங்குதனிற்பரியட்டமும்கமலப்பதயுகமும்அழகியபத்மாஸநமும் ஈராறுதிருநாமமணிந்தவெழிலும் இனிதிருப்போடெழில்

(க) விவிக்தம் - ஏகாந்தம்.

ஞாநமுத்திரையுந் தாமுமாக வெழுந்தருளி யிருக்கிற பிள்ளைலோகாசார்யருடைய திவ்யமங்கள விக்ரஹத்தை, பாதாதி கேசாந்தமாகவும் கேசாதி பாதாந்தமாகவும், உருவு வெளிப்பாட்டாலே, விசத விசததர விசததமமாக த்யாநித்துக்கொண்டு; "𑌵𑌾𑌰𑍍𑌤𑍍𑌤𑍋𑌞𑍍𑌛𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌪𑌿𑌯𑌦𑍀𑌯𑌗𑍋𑌷𑍍𑌠𑍍𑌯𑌾𑌂 𑌗𑍋𑌷𑍍𑌠𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌭𑌵𑌨𑍍𑌤𑌿" (வார்த்தோஞ்சவர்த்யாபியதீயகோஷ்ட்யாம் கோஷ்ட்யந்தராணாம் ப்ரதமாபவந்தி) என்கிற வேறுபாட்டை யுடைத்தாயிருந்துள்ள நம்பிள்ளை திருவோலக்கத்துக்குப் (க) போலியான அவருடைய திருவோலக்கவாழ்வை, "𑌭𑌾𑌵𑍋𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌗𑌚𑍍𑌛𑌤𑌿" (பாவோநாந்யத்ர கச்சதி) என்னும்படி *அஸ்தமிதாந்யபாவராய் த்யாநித்துக்கொண்டு, தந்திருமேனியிலே (உ) சிலந்தி நூலிழைக்கும்படியாகவும், "𑌨𑍈𑌵𑌦𑌂𑌶𑌾𑌨𑍍" (நைவதம்சாந்) இத்யாதிப்படியே - கடித்ததும் ஊந்ததும் தெரியாதபடியாகவும், நாலாறுநாள் ஸமாதியிலே எழுந்தருளியிருக்குமவராய்; "வாழி-எறுதிருவுடையா னெந்தையுலகாரியன் சொல்-தேறுதிருவுடையான்சீர்" என்கிறபடியே - ஸ்வாசார்யரான பிள்ளை லோகாசார்யருடைய திவ்யஸூக்திகளாயிருந்துள்ள ஸ்ரீவசநபூஷணத்யகிலரஹஸ்ய தாத்பர்யஸாரதமார்த்த விசேஷங்களையே ஸர்வகாலமு மநுபவித்துக்

(க) போலி - ஸத்ர்சம். (உ) சிலந்தி - ஓர்பூச்சி.

கொண்டு போருமவராய்; "பாருலகைப் பொன்னுலகாப் பார்க்கவும் பெற்றோம்" என்று தாமே பேசும்படி - ஸம்ஸாரபரமபதவிபாகமற இரண்டையும் (க) ஒருபோகியாக்கிக்கொண்டு போருகிற விளாஞ்சோலைப்பிள்ளை; * வகுளபூஷண சாஸ்த்ரஸாரமாய் சரமரஹஸ்யமாயிருந்துள்ள ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ரத்திலே பரக்கச்சொன்ன விசேஷங்களையெல்லாம் தம்முடைய பரமக்ருபையாலே அனைவர்க்கும் ஸுக்ரஹமாம்படி ஸங்க்ரஹித்தருளுவதாகத் திருவுள்ளம்பற்றி; ஸ்ரீகீதைக்கு சரமச்லோகம் ப்ரதாநமா யிருக்கிறாப்போலே, சரம ப்ரமாண ப்ரமேய ப்ரமாதாக்களை சரமமாக † ப்ரதிபாதிக்கிற சரமப்ரகரணம் ஸ்ரீவசநபூஷணத்துக்காக ப்ரதாநமாயிருக்கையாலே; இதில் ப்ரதிபாதிக்கிற அர்த்தவிசேஷங்களையும், மற்றை ப்ரகரணங்களில் ததுபயோகிதயா பரக்கப்ரதிபாதிக்கிற அர்த்த விசேஷங்களையும் பரப்பற ஏழுபாட்டாலே ஸங்க்ரஹித்து; "வாழியவனமுதவாய் மொழிகள்" என்னும்படி-ஸர்வோபபோக்யமா யிருந்துள்ள "ஸப்த காதை" என்கிற ப்ரபந்த முகத்தாலே அருளிச்செய்கிறார்.

அதெங்ஙனே யென்னில்; "வேதார்த்தமறுதியிடுவது"[க] என்றுதொடங்கி "ப்ரபத்யுபதேசம் பண்ணிற்றும்

(க) ஒருபோகி - ஏகபோகம். † "முக்யமாக" என்றும்பாடம்.

இவளுக்காக" [௨௨] என்னுமளவாக-புருஷகார ப்ரகரணத்தில் சொல்லுகிற அர்த்தவிசேஷங்களை, "𑌅𑌹𑌂𑌤𑌾𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑌸𑍍𑌯" (அஹந்தாப்ரஹ்மணஸ்தஸ்ய) இத்யாதிந்யாயத்தாலே (அம்பொனரங்கர்க்கும்) என்கிற விடத்தில் தாத்பர்யவிதியாக ஸூசிப்பிக்கையாலும்; "ப்ரபத்திக்கு" [௨௯] என்றுதுடங்கி "𑌏𑌕𑌾𑌨𑍍𑌤𑍀 𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃" [௭௯] (ஏகாந்தீவ்யபதேஷ்டவ்ய:) என்னுமளவாக - உபாயப்ரகரணத்தில் சொல்லுகிற அர்த்தவிசேஷங்களை (உம்பர் திவமென்னும் வாழ்வுக்குச்சேர்ந்தநெறி) என்கிற விடத்தில் ஸூசிப்பிக்கை யாலும்; "உபாயத்துக்கு" [௮0] என்று துடங்கி "உபேய விரோதிகளுமாயிருக்கும்"[௱0௭]என்னுமளவாக - அதிகாரி நிஷ்டாக்ரமப்ரகரணத்தில் சொல்லுகிற அர்த்த விசேஷங்களை, (அஞ்சுபொருளும், பார்த்த குருவினளவில், தன்னையிறையை) இத்யாதிகளாலே ஸூசிப்பிக்கையாலும்; "தான் ஹிதோபதேசம்பண்ணும்போது" [௱0௮] என்று துடங்கி "உகப்பும் உபகார ஸ்ம்ர்தியும் நடக்கவேணும்" [௱௯௫] என்னுமளவான ஆசார்யாநுவர்த்தநப்ரகரணத்தில் சொல்லுகிற அவ்வர்த்த விசேஷங்களை, (என்பக்கலோதினர்) இத்யாதியால் ஸூசிப்பிக்கையாலும்; "ஸ்வதோஷாநுஸந்தாநம் பயஹேது" [௱௯௯] என்று துடங்கி "நிவர்த்தக ஜ்ஞாநம் அபயஹேது"

[௨௦௬] என்னுமளவாக - பகவந்நிர்ஹேதுக க்ர்பாப்ர பாவ ப்ரகரணத்தில் சொல்லுகிற அர்த்தவிசேஷங்களை (அழுக்கென்றிவையறிந்தேன்) என்கிறபாட்டிலே ஸூசிப்பிக்கையாலும்; "ஸ்வதந்த்ரனை யுபாயமாகத்தான் பற்றினபோதிறே இப்ப்ரஸங்கந்தானுள்ளது" [௨௦௭] என்றுதுடங்கி "அநந்தரம்பலபர்யந்தமாக்கும்" [௪௬௩] என்னுமளவான சரமப்ரகரணத்தில் சொல்லுகிற அர்த்தவிசேஷங்களை, முதற்பாட்டுத் துடங்கி (தீங்கேது மில்லா) என்னுமளவாக ஸங்க்ரஹித்து; அடைவே அபிதாநவர்த்தியாலும் அந்வய முகத்தாலும் வ்யதிரேகமுகத்தாலுமாக ப்ரகாசிப்பித்தருளுகையாலும், இப்ப்ரபந்தம், பரமரஹஸ்யமான ஸ்ரீவசந பூஷணார்த்தங்களுக்கு ஸங்க்ரஹமாமென்னக் குறையில்லை யிறே.

ப்ரதமபர்வத்தை, "செக்கர்மாமுகில்" என்று துடங்கி நம்மாழ்வார் திருவாசிரியத்தில் ஏழுபாட்டாலே ப்ரகாசிப்பித்தருளினாப்போலே, இவரும் சரமபர்வத்தை "அம்பொனரங்கர்க்கும்" என்றுதுடங்கி இப்ப்ரபந்தந் தன்னில் ஏழுபாட்டாலே ப்ரகாசிப்பித்தருளுகிறார்.

இன்னம், அதிலுமிதுக்கு நெடுவாசியுண்டு.—அதெங்ஙனே யென்னில்; பாதப்ராஸாதி நியதியில்லாத ஆசிரியப்பாவாய்க்கொண்டு நடந்து "ఽంసారబద్ధ శిత మాత్మా"

ஹு:'' (ஸம்ஸாரபந்தஸ்திதி மோக்ஷஹேதுː) என்றும், "సిద్ధిర్భవతివా నేతి సంశయోచ్యుత సేవినామ్'' (ஸித்திர்பவதிவா நேதி ஸம்சயோச்யுத ஸேவிநாம்) "அந்நாள் நீதந்தவாக்கை" "மங்கவொட்டுன் மாமாயை" என்றும் சொல்லுகிறபடியே - பந்தமோக்ஷங்க ளிரண்டுக்கும் பொதுவான ப்ரதமபர்வத்தை ப்ரதிபாதிக்கும் அது; பாதப்ராஸாதி நியதியுடைத்தான வெண்பாவாய்க் கொண்டு நடந்து, "తమసః పారందర్శయతి। ఆచార్యస్తు తేగతింవక్తా'' (தமஸஃ பாரம்தர்சயதி - ஆசார்யஸ்துதே கதிம்வக்தா) என்றும் "నసంశయోస్తి తద్భక్త పరిచర్యారతాత్మనామ్'' (நஸம்சயோஸ்தி தத்பக்த பரிசர்யாரதாத்மநாம்) என்றும், "நீதியால் வந்திப்பார்க்குண்டிழியாவான்" என்றும், சொல்லுகிறபடியே - மோக்ஷைக ஹேதுவான சரமபர்வத்தைச் சதிராகப்ரதிபாதிக்கிறது.

அன்றிக்கே, ஆண்டாளுடைய திவ்யஸூக்திப்ரமாணகமாய் த்ரயோதசவாக்யாத்மகமாயிருக்குள்ள வாக்யக்குருபரம்பரையிலே (க) துரீயவாக்ய ஸங்க்ரஹமாய், ஸப்தாக்ஷரியான ப்ரதம வாக்யத்தில் ப்ரதமாக்ஷரத்தை (அம்பொனரங்கர்க்கும்) என்று துடங்கி முதலடியில் முந்துற முன்னம் முதல் பாட்டும், த்விதீயாக்ஷரத்தை

(க) துரீயம் - நான்காவது.

(அஞ்சு பொருளுமளித்தவன்) என்கிற விடத்திலிரண்டாம் பாட்டும், த்ர்தீயாக்ஷரத்தை, (பார்த்தகுரு) என்கிற விடத்தில் நேராக மூன்றாம் பாட்டும், துரீயாக்ஷரத்தை, (ஒருமந்திரத்தின்) என்கிற விடத்தில் நாலாம் பாட்டும், பஞ்சமாக்ஷரத்தை (என்பக்க லோதினர்) என்கிற பாட்டில் அஞ்சாம்பாட்டும், ஷஷ்டாக்ஷரத்தை (அம்பொனரங்கா) என்கிறவிடத்தில் நேரே ஆறாம்பாட்டும், சரமாக்ஷரத்தை (சேருவரேயந்தாமந்தான்) என்கிறவிடத்தில் சரமதமமாக ஏழாம்பாட்டும், அடைவே உட்கொண்டு நடந்த ஸ்ரீராமாயணம் இருபத்து நாலாயிரமா யவதரித்தவோபாதி, இப்ப்ரபந்தமும் ஏழுபாட்டாயவதரித்த தென்னவுமாம்.

ஸ்ரீமதுரகவிகளும் வடுகநம்பியும் சரமபர்வத்தை உக்த்யநுஷ்ட்டாநங்களாலே அடைவே வ்யக்தமாக்கினாப் போலே காணும், இவரும் இப்புடைகளிலே சரமபர்வத்தை உக்த்யநுஷ்ட்டாநங்களாலே வ்யக்தமாக்கின படி. ... ... ... ... ... *

அ.—முதற்பாட்டில், "ప్రాప్యస్యబ్రహ్మణోరూపం ప్రాప్తుశ్చ ప్రత్యగాత్మనః। ప్రాప్త్యుపాయం ఫలంప్రాప్తేస్తథా ప్రాప్తివిరోధిచ॥ వదన్తి సకలావేదాస్సేతిహాసపురాణకాః। మునయశ్చమహాత్మానోవేదవేదార్థవేదినః" (ப்ராப்யஸ்யப்ரஹ்மணோரூபம் ப்ராப்துஸ்சப்ரத்யகாத்

மநஃ - ப்ராப்த்யுபாயம் பலம்ப்ராப்தே ஸ்ததாப்ராப்தி விரோதிச ॥ வதந்தி ஸகலாவேதா ஸ்ஸேதிஹாஸ புராண காஃ-முநயச்ச மஹாத்மாநோ வேதவேதார்த்த வேதிநஃ) என்கிறபடியே - தத்வவேதைக ப்ரமாணமான வேதாந்தவாக்யங்களாலும், தத்ஸங்க்ரஹமான திருமந்த்ரத்தில் பதத்ரயத்தாலும், ததர்த்த நிஷ்டரான ஆழ்வார்கள் பாசுரத்தாலும், அவஶ்யம் (க) ஜ்ஞாதவ்யதயா (உ) அறுதியிடப்பட்ட (ங) அர்த்தபஞ்சகத்தை நேராக வுபதேசித்தருளுமவனே ஸதாசார்யனாகிறானென்று திருவுள்ளம் பற்றி யருளிச்செய்கிறார்.

## முதற்பாட்டு.

மூ.—அம்பொனரங்கர்க்கு மாவிக்கு மந்தரங்க
சம்பந்தங்காட்டித் தடைகாட்டி—உம்பர்
திவமென்னும் வாழ்வுக்குச் சேர்ந்தநெறிகாட்டு
மவனன்றோ வாசாரியன்.

பதவுரை.—அம் - அழகியதாய், பொன் - பாவநமான, அரங்கர்க்கும் - திருவரங்கத்தைக் கோயிலாகவுடைய பெரியபெருமாளுக்கும், ஆவிக்கும் - பத்தர் முக்தர் நித்யர் என்று மூன்றுவகைப்பட்ட ஆத்மவஸ்துவுக்கும் உள்ள,

(க) ஜ்ஞாதவ்யதயா- அறியத்தக்கதாக.

(உ) அறுதியிடுகை - நிச்சயிக்கை.

(ங) அர்த்தபஞ்சகமாவது - ஸ்வஸ்வரூப, பரஸ்வரூப, புருஷார்த்த ஸ்வரூப, உபாயஸ்வரூப, விரோதிஸ்வரூபங்களை உள்ளபடி அறிகை. இத்தை, "அர்த்தபஞ்சகம்" என்னும் க்ரந்தத்தில் டாக்ககாணலாம்.

அந்தரங்கசம்பந்தம் - "அவன் சேஷி, நாம்சேஷபூதர்" என்னும் உறவை காட்டி - வெளியிட்டு, தடை - எம்பெருமான்திருவடிகளைப் பெறுகைக்கு விரோதியாயுள்ளவற்றை, காட்டி - தெரிவித்து, உம்பர் - இங்குள்ளார்க்கு மேலாய், திவம் என்னும் - வைகுந்தமாநகரான பரமபதத்தில் எப்போதும் எல்லாகைங்கர்யங்களும் செய்கையாகிற, வாழ்வுக்கு - வாழ்ச்சிக்கு, சேர்ந்த - அநுரூபமான, நெறி - பக்த்யுபாயத்தை, காட்டுமவன், அன்றோ - திருமந்த்ரோபதேச முகத்தாலே நன்றாகக்காட்டு மவனேயிறே, ஆசாரியன் - ஆசார்யலக்ஷண முடையவன்.

## வ்யாக்யாநம்,

(அம்பொனரங்கர்க்கும்) இத்யாதி. "ஸம்ஸாரிகள், தங்களையும் ஈச்வரனையும் மறந்து" இத்யாதியாலே-அர்த்தபஞ்சகத்தை உபதேசித்தருளுமவனே ஆசார்யன் என்று பிள்ளை யருளிச் செய்தாரிறே; இவரும், அத்தையிட்டறிவித்து†"காட்டுமவனன்றோ ஆசாரியன்" என்கிறார் பிள்ளையை (க) அடியொத்துமவர் இவரொருவருமே போலேகாணும்; *பேசிற்றேபேசும் ஏககண்டராயிருக்குமிருப்புள்ளது நம்முதலிகளுக்கேயிறே. "𑌉𑌕𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌶𑌦𑍀𑌕𑌾𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌬𑍋𑌧𑌨𑌮𑍍 । 𑌮𑌤𑌂𑌵𑌿𑌵𑌰𑌣𑌂𑌤𑌤𑍍𑌰" (உக்தார்த்த விசதீகார யுக்தார்த்தாந்தரபோதநம் - மதம்விவரணம் தத்ர) என்கிறபடியே-திருமந்த்ரத்தில் ப்ரதமபதமாய்,

---

† "அத்தை யெடுத்து" என்றும்காண்கிறது, (க) அடியொத்துகை - அநுஸரிக்கை.

அஸம்ஹிதாகாரேண பதத்ரயாத்மகமா யிருந்துள்ள ப்ரணவத்தாலே ப்ரதிபாதிக்கப்படுகிற அர்த்தங்களுக்கு உபயுக்தங்களாயும், தத்ப்ரதிபந்நங்களாயு மிருக்கிற அர்த்த விசேஷங்களுக்கு நேரே ப்ரகாசமாய்க்கொண்டு, பதத்வயாத்மகமான மந்த்ர சேஷம் ப்ரணவத்துக்கு விவரணமாயிருக்கிறபடியைத் திருவுள்ளம் பற்றி, முந்துறமுன்னம் "తస్యప్రకృతిలీనస్య యః పరస్సమహేశ్వరః" (தஸ்யப்ரக்ர்திலீநஸ்ய யஃபரஸ்ஸமஹேச்வரஃ) என்றும் "అకారో విష్ణువాచకః" (அகாரோ விஷ்ணுவாசக:) என்றும், "துளக்கமில் விளக்கமாய்" என்றும், "అవరక్షణే" (அவரக்ஷணே) என்றும் சொல்லுகிறபடியே ஸ்ரீயஃபதியான ஸர்வேச்வரனையும், அவனுடைய ரக்ஷகத்வ சேஷித்வங்களையும் சாப்தமாக ப்ரதிபாதிக்கிற ஸவிபக்திகமான அகாரத்தினுடையவும், அதிலே அநுக்தங்களாய் ரக்ஷணோபயோகிகளான கல்யாணகுணங்களை சாப்தமாகச் சொல்லுகையாலே தத்விவரணமான நாராயண பதத்தினுடையவும் அர்த்தத்தை உட்கொண்டருளிச் செய்கிறார்.

(அம்பொனரங்கர்க்கும்) அழகிய தாயும், பாவநமாயுமிருந்துள்ள * திருவரங்கப் பெருநகரத்தை "தென் திருவரங்கம் கோயில்கொண்டானே" என்கிறபடியே-தமக்கிருப்

பிடமாக வுடையராய், ஸர்வரக்ஷகராய், ஸர்வசேஷியாய், அசரண்ய சரண்யத்வாதி கல்யாண குணகணபூஷிதரான பெரிய பெருமாளுக்கும். ஸ்ரீமதுரையை "శుభా" (சுபா) என்றும், "పాపహరా" (பாபஹரா) என்றும் சொன்னவோபாதி, கோயிலையும் "தென்னரங்கம்" என்றும், "பொன்னரங்கம்" என்றும் சொல்லுகையாலே, இது தானே போக்யமாயும் பாவநமாயுமிறே யிருப்பது. போக்யதைக்கடி - "தெழிப்புடைய காவிரிவந்தடிதொழும் சீரரங்கம்" என்றும், "தேன்தொடுத்த மலர்ச்சோலைத் திருவரங்கம்" என்றும், "இனிதாகத்திருக்கண்கள் வளர்கிற திருவரங்கம்" என்றும் சொல்லுகிற - நீர்வாய்ப்பும் நிழல் வாய்ப்பும் நிலவாய்ப்பு மாகிறவிவை ; பாவநத்வத்துக்கடி - "திசைவிளக்காய் நிற்கின்றதிருவரங்கம்" என்றும், 'செழுமணிகள் விட்டெறிக்குந் திருவரங்கம்" என்னும் சொல்லுகிற - அஜ்ஞாநாந்தகார நிரோதித்வமும், ஸ்வப்ரகாசகத்வமு மாகிற விவை, பெரிய பெருமாளுக்குள்ள உபயலிங்கத்வம் இதுக்கு முண்டுபோலே காணும். தம்மைப்பற்றி யிருப்பார்க்குத் தம்படியைக் * கொடுக்குமவரிறே அவர்தான்.

(அம்பொனரங்கர்க்கும்) என்று - அவரை ஒரு விசேஷவஸ்துவை யிட்டாகாதே நிரூபிக்க வேண்டுவது.

* "தம்அடியை" என்று சிலஸ்ரீகோசங்கள்.

"திருமாலடியார்கள்" என்று - அத்தலையாலே இத்தலைக்கு நிரூபணமானாப்போலே காணும், இத்தலையாலே அத்தலைக்கு நிரூபண மிருக்கிறபடி. "ராமாநுஜம் லக்ஷ்மண பூர்வஜஞ்ச" (ராமாநுஜம் லக்ஷ்மணபூர்வஜஞ்ச) என்றதிறே. (அம்பொனரங்கர்க்கு) "என்னரங்கத்தின்னமுதர் குழலழகர் வாயழகர்" என்றும் "அரங்கமேய வந்தணனை" என்றும் சொல்லுகிறபடியே - அழகும் பாவநத்வமும் பெரிய பெருமாளுக்கே யாகவுமாம்.

இத்தால் - ஸமஸ்த கல்யாண குணாத்மகத்வமும், அகிலஹேய ப்ரத்யநீகத்வமுமாகிற உபயலிங்கத்வமுஞ் சொல்லுகிறது.—இவ்வுபயலிங்கத்வம் பரத்வோத்தம்பகமாகையாலே இத்தையே இவர்க்கு நிரூபகமாகச் சொல்லுகிறார். "அஹந்தா ப்ரஹ்மணஸ்தஸ்ய ஸாஹமஸ்மி ஸநாதநீ" (அஹந்தாப்ரஹ்மணஸ்தஸ்ய ஸாஹமஸ்மிஸநாதநீ) என்றும் "இவளோடேகூடியே வஸ்துவினுடைய வுண்மை" என்றுஞ் சொல்லுகிறபடியே - (அரங்கர்க்கு) என்கிறவிடத்தில் பிராட்டியும் பகவத்ஸ்வரூபாந்தர்ப் பூதையாய்க் கொண்டு தோற்றுகையாலே, புருஷகாரப்ரகரணத்தில், "புருஷகாரமாம் போது க்ருபையும், பாரதந்த்ர்யமும், அநந்யார்ஹத்வமும் வேணும்" [எ] இத்யாதியாலே சொல்லுகிற புருஷகாரவைபவமும், (அம், பொன்) என்கிற

விசேஷண த்வயத்தாலே ஸூசிப்பித்தருளுகிறாரென்று கண்டுகொள்வது. அன்றிக்கே, (அம்பொன்) என்று- அழகாலேவந்த ஸ்ப்ர்ஹணீயதையைச் சொல்லுகிறதாகவுமாம். ஸ்ப்ர்ஹணீயதை, "కామదం కామగం కామ్యం విమానం రఙ్గసంజ్ఞకమ్" (காமதம் காமகம் காம்யம் விமாநம் ரங்கஸம்ஜ்ஞகம்) என்கையாலே - கோயிலுக்கும், "సఖ్యం సమస్తజనచేతసి సందధానమ్" (ஸக்யம் ஸமஸ்தஜநசேதஸி ஸம்ததாநம்) என்கையாலே - பெரிய பெருமாளுக்கு முண்டிறே. "రతిం గతో యతస్తస్మాద్రఙ్గమిత్యుచ్యతే బుధైః" (ரதிம்கதோ யதஸ்தஸ்மாத் ரங்கமித்யுச்யதே புதைः) என்கிறபடியே - பெரியபெருமாளுக்கு நிரதிசயாநந்த வர்த்தகமா யிருக்கையாலே கோயிலை அரங்கமென்கிறது.

(அம்பொனரங்கர்க்கும்)"போயிந்திரலோகமாளும்" என்கிறபடியே - அர்ச்சிராதிமார்க்கத்தாலே சென்று விரஜையிலே குடைந்து நீராடி அமாநவ கரஸ்பர்சம் முன்னாக அப்ராக்ர்த தேஹத்தை பரிக்ரஹித்துப் புகுரவேண்டியிருக்கும் பொன்னுலகுபோலேயும், ஸம்ஸாரவர்த்தகமாயிருக்கும்*கொடுவுலகம் பேலாயு மிருக்கையன்றிக்கே, இச்சரீரத்தோடேதானே புகுரலாயும் ஸம்ஸார நிவர்த்தகமாயு மிருக்கையாலே"அரங்கமாநகர்"என்னும்படி விபூதித்வயத்துக்கும் புறம்பாய், அதளவ த்ர்தீய விபூதியாயிருக்

துள்ள * திருவரங்கந் திருப்பதியிலே, "அடியவரை யாட்கொள்வானமருமூர்" என்கிறபடியே-இங்குள்ளாரை யடிமைகொள்வதாக, அவதாரங்கள்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே ஸ்தாவர ப்ரதிஷ்டையாய்க்கொண்டு அமர்ந்து எழுந்தருளியிருக்கிற பெரிய பெருமாளுக்கும் "முகில்வண்ணனடி மேற்சொன்னசொல் மாலையாயிரம்" என்றும், "மதிளரங்கர் வண்புகழ்மேலான்ற தமிழ்மறைகளாயிரமும்" என்றும், "శఠకోపవాక్వపుశ్రీరంగక్రోశయితమ్" (சடகோபவாக்வபுஷிரங்கக்ர்ஹேசயிதம்) என்றும் சொல்லுகிறபடியே—இவர்தாம் "ప్రమాణం శఠజిత్సూక్తిః ప్రమేయంరంగచన్ద్రమాః" (ப்ரமாணம் சடஜித்ஸூக்திர் ப்ரமேயம் ரங்க சந்த்ரமா:) என்னும்படி மெய் சரமமாய்க்கொண்டு மானசரமமான திருவாய்மொழிக்கு நேரே ப்ரதிபாத்யராகையாலும், பதின்மர் பாடும் பெருமாளாகையாலும், குருபரம்பரைக்கு முதலடியாகையாலும், * மாமலைமற்றுமாக உகந்தருளின நிலங்களெல்லாவற்றுக்கும் அடித்தலையாகையாலும், மற்ற எம்பெருமான்களைச் சொல்லாதே இவர் தம்மையே ப்ரதாநராகச் சொல்லுகிறார்.

"அம்பொனரங்கர்க்கு" என்று - விவரண விவரணீய பாவாபந்நங்களான அகார நாராயண பதங்களினுடைய அர்த்தத்தையும் "அரங்கர்க்கு" என்கிற விப

க்தியாலே - லுப்தசதுர்த்தியினுடைய அர்த்தத்தையுமுட்கொண்டு அருளிச்செய்தாராய், மேல் "మకారోజీవవాచకః" (மகாரோஜீவவாசகஃ) என்கிறபடியே - இச்சேஷத்வாச்ரயமான சேதநவஸ்துவை சாப்தமாகப்ரதிபாதிக்கிற மகாரத்தினுடையவும், அதில் அநபிஹிதங்களான இச் சேதநவஸ்துவினுடைய நித்யத்வைகத்வ பஹுத்வாதிகளை சாப்தமாகச் சொல்லுகையாலே ஏதத்விவரணமான நாரபதத்தினுடையவும் அர்த்தத்தையுட்கொண்டு அருளிச்செய்கிறார் (ஆவிக்கும்) ப்ரத்யயங்களுக்கு ப்ரக்ர்த்யர்த்தகத ஸ்வார்த்த போதகத்வம் நியதமாகையாலே, லுப்த சதுர்த்த்யர்த்தமான சேஷத்வம்ப்ரக்ர்த்யர்த்தமான ஈப்ஸ்வரகதமாக வேண்டியிருக்க, சேதநகதமானபடி யெங்ஙனே யென்னில்; இங்கு சேஷத்வமாகிறது - ஸம்பந்தவிசேஷாத்மகமாய்க்கொண்டு பயநிரூப்யமாகையாலே சேதநகதமானாலும் ஈச்வரகதமென்னக் குறையில்லையிறே.

(ஆவிக்கும்) "அம், பொன்" என்கிற பதங்களை இங்கும் கூட்டிக்கொள்வது. இப்படி நிருபாதிகசேஷியான பெரியபெருமாளுக்கு சேஷமாய், ப்ரக்ர்தேஃ பரமாய், ஜ்ஞாநாநந்தமயமாய், ஜ்ஞாநகுணகமாய், நிர்விகாரமாய், ஏகரூபமாய், பத்தமுக்தநித்யரூபேண த்ரிவிதமான ஆத்ம

வஸ்துவுக்கும். "పతింవిశ్వస్య" (பதிம்விச்வஸ்ய) என்றும், "மூவுலகாளி" என்றும், "என்னையாளன்" என்றும் இத்யாதிகளாலே-பெரிய பெருமாளே வகுத்த சேஷியாகவும், சோதநவர்க்கம் தச்சேஷமாகவுஞ் சொல்லிற்றிறே. "సర్వంహితంప్రాణినాంవ్రతమ్" (ஸர்வம் ஹிதம்ப்ராணிநாம்வ்ரதம்) என்கையாலே-ப்ராணனுகிறது பஞ்சவர்த்தி ப்ராணனே யாகிலும், "ஆவிக்கோர்பற்றுக் கொம்பு" என்ற வோபாதி சேதநனிடத்திலும் ப்ரயோகிக்கக்காண்கையாலே, அத்தைப்பின்சென்று இவருமிப்படி ப்ரயோகித்தருளுகிருர்.

(அம்பொனரங்கர்க்குமாவிக்கும்) அர்த்தபஞ்சகம் துடக்கமானவற்றிலே - ஸ்வஸ்வரூபம் முன்னுக பரஸ்வரூபத்தைப்பிள்ளை அருளிச்செய்தாரேயாகிலும், "యస్యాస్మి" (யஸ்யாஸ்மி) இத்யாதி ச்ருதிகளிலும், அவற்றுக்கடியான ப்ரணவத்திலும், "ప్రాప్యస్య బ్రహ్మణో రూపమ్" (ப்ராப்யஸ்யப்ரஹ்மணோரூபம்) இத்யாதிவசநங்களிலும், பரஸ்வரூபம் முன்னுக ஸ்வஸ்வரூபத்தைச் சொல்லுகையாலே அத்தை அடியொத்தி இவருமிப்படி நிர்த்தேசிக்கிருர்.

"యువతిశ్చకుమారిణీ" (யுவதிஶ்சகுமாரிணீ) என்கிற ஸமுச்சயம் அந்வாசயமான வோபாதி, (அரங்கர்க்குமாவிக்கும்) என்கிற இஸ்ஸமுச்சயம் அந்வாசய மத்தனை

போக்கி, ஸமஸமுச்சயமன்று. சேஷசேஷிகளுக்கு ஸமப்ராதாந்யமில்லையிறே;- "భోగమాత్రసామ్యలిఙ్గాచ్చ-జగద్వ్యాపారవర్జమ్" (போகமாத்ரஸாம்யலிங்காச்ச - ஜகத்வ்யாபாரவர்ஜ்ஜம்) என்கையாலே - சேதநனுக்கு ஈச்வரனோடே போகமாத்ரத்திலே ஸாம்யமொழிய ஸர்வப்ரகாரஸாம்யமில்லையிறே. "నిరఞ్జనః పరమం సామ్యముపైతి" (நிரஞ்ஜநஃ பரமம்ஸாம்யமுபைதி) "మమసాధర్మ్యమాగతాః" மமஸாதர்ம்யமாகதாஃ) "தம்மையேநாளும்வணங்கித் தொழுவார்க்குத் - தம்மையே யொக்கவருள் செய்வர்" இத்யாதிகளுக்கும் இதிறே ஹ்ருதயம்.

அநந்தரம், "అవధారణ మన్యేతు మధ్యమాన్తం వదన్తిహి" (அவதாரண மந்யேதுமத்யமாந்தம்வதந்திஹி) என்றும், "అస్వాతన్త్ర్యంతు జీవానామాధిక్యంపరమాత్మనః। నమసాప్రోచ్యతే తస్మిన్ అహన్తా మమతోజ్ఝితా" (அஸ்வாதந்த்ர்யந்து ஜீவாநா மாதிக்யம் பரமாத்மநஃ । நமஸாப்ரோச்யதே தஸ்மிந் அஹந்தாமமதோஜ்ஜிதா) என்றும் சொல்லுகிறபடியே-அந்யசேஷத்வ நிவர்த்தி பகவச்சேஷத்வங்களை சாப்தமாக ப்ரதிபாதிக்கிற உகாரத்தினுடையவும், அதில் அநுக்தங்களான ஸ்வாநர்ஹத்வாசித்வத் பாரதந்த்ர்யாதிகளை சாப்தமாகச் சொல்லுகையாலே தத்விவரணமான நமஸ்ஸினுடையவு மர்த்தத்தை யுட்கொண்டு அருளிச்

செய்கிறர் (அந்தரங்கசம்பந்தங்காட்டி) இவ்விருவர்க்குமுண்டான அநந்யார்ஹ சேஷத்வமாகிற அந்தரங்க ஸம்பந்தத்தை, ஸ்வசேஷநிவர்த்யசித்வத்பாரதந்த்ர்யபர்யந்தமாகவும், தத்பராகாஷ்டையான பாகவத சேஷத்வ பர்யந்தமாகவும்வெளியிட்டுக்கொடுத்ததிறே. ஸவிவரணமான உகாரத்துக்கர்த்தம் - "ఉకారోఽనన్యార్హ నియమయతి సమ్బన్ధమనయోః" (உகாரோநந்யார்ஹம் நியமயதிஸம்பந்தமநயோ:) என்னக்கடவதிறே. ஸம்பந்தமாத்ரம் இதர சேஷத்வோபமர்த்தி யல்லாமையாலும், ஸ்வவிரோதயுதைஅஸஹமாகையாலும் (அந்தரங்கம்) என்றத்தை இங்ஙன் விசேஷிக்கிறர். * ஸ்தாநப்ரமாணத்தாலே அவதாரணார்த்தமாக உகாரம் விசேஷணஸங்கதமாகையாலே அயோகவ்யவச்சேதமாமித்தனை போக்கி, அந்யயோகவ்யவச்சேதகமானபடி யெங்ஙனேயென்னில் ; விசேஷண விசேஷ்யங்கள் ஸமாநவிபக்த்யா நிர்த்திஷ்டங்களான விடத்திலே அந்நியமமொழிய, அஸமாநவிபக்த்யா நிர்த்திஷ்டங்களான விடத்திலே அந்நியமமில்லாமையாலே, இந்த ஏவகாரம் அந்யயோகவ்யவச்சேதகமென்னக் குறையில்லை. " దేవదత్తం ప్రత్యేవేదణ్డనమ్" (தேவதத்தம் ப்ரத்யேவதண்டநம்) இத்யாதி ப்ரயோகங்களிலே இவ்வர்த்தம் ஸம்ப்ரதிபந்நமிறே, அன்றிக்கே, அந்தரங்க

ஸம்பந்தமாகிறது - "పితా చ రక్షక శ్శేషీ భర్తా జ్ఞేయో రమాపతిః। స్వామ్యాధారో ఽమమాత్మా చ భోక్తా చాద్యమనూదితః" (பிதாசரக்ஷகஶ்ஶேஷீ பர்த்தாஜ்ஞேயோ ரமாபதி: । ஸ்வாம்யாதாரோமமாத்மாச போக்தாசாத்யமநூதித:) என்கிறபடியே, இவ்விருவர்க்குமுண்டான திருமந்த்ரத்தில் ப்ரக்ர்திப்ரத்யய தாது பதங்களாலே ப்ரதிபாதிக்கப்படுகிற நவவித ஸம்பந்தமாகவுமாம்.

திருமந்த்ரந்தான், ப்ரதமபதமான ப்ரணவத்தில் வைத்துக்கொண்டு ப்ரதமாக்ஷரமான அகாரத்தில் ப்ரக்ர்த்யம்சத்தாலே - "పితా నారాయణః" (பிதாநாராயண:) என்றும், "దేవదేవో హరిః పితా" (தேவதேவோ ஹரி:பிதா) என்றும், "எம்பிரானெந்தை" என்றும் சொல்லுகிறபடியே, பிதாபுத்ரபாவஸம்பந்தத்தையும்; அதில் "அவ ரக்ஷணே" என்கிற தாத்வம்சத்தாலே - "కో హ్యేవాన్యాత్ కః ప్రాణ్యాత్?" (கோஹ்யேவாநாந்யாத்கப்ராண்யாத்) என்றும், "న హి పాలనసామర్థ్యమ్, ఋతే సర్వేశ్వరం హరిమ్?" (ந ஹி பாலந ஸாமர்த்ய ம்ர்தே ஸர்வேச்வரம் ஹரிம்) என்றும், "கருத்தில்தேவுமெல்லாப்பொருளும் வருத்தித்தமாயப் பிரானை" என்றுஞ்சொல்லுகிறபடியே, ரக்ஷ்யரக்ஷகபாவ ஸம்பந்தத்தையும் ; ப்ரத்யயமான விதில் லுப்தசதுர்த்யம்சத்தாலே - "పతిం పతీనామ్" (பதிம்பதீநாம்) என்றும்,

“జగత్పతిం దేవదేవమ్” (ஜகத்பதிம் தேவதேவம்) என்றும், “அமரர்களதிபதி” என்றுஞ்சொல்லுகிறபடியே, சேஷசேஷிபாவஸம்பந்தத்தையும்; த்விதீயாக்ஷரமான உகாரத்தில் அவதாரண மாகையாலே - “భగవతఏవాహమ్” (பகவதஏவாஹம்) என்றும், “లోకభర్తారమ్” (லோகபர்த்தாரம்) என்றும், “பறவையேறும்பரமபுருடாநீ யென்னைக்கைக்கொண்டபின்” என்றும்சொல்லுகிறபடியே, பர்த்ர்பார்யாபாவஸம்பந்தத்தையும்; த்ர்தீயாக்ஷரமான மகாரத்திலே “మనుఅవబోధనే” (மநுஅவபோதநே) என்கிற தாதுவாலே - “నిదిధ్యాసితవ్యః” (நிதித்யாஸிதவ்யஃ) என்று “ధ్యేయోనారాయణస్సదా” (த்யேயோநாராயணஸ்ஸதா) என்றும், “உணர்விலுள்ளே யிருத்திநேன்” என்றுஞ் சொல்லுகிறபடியே, ஜ்ஞாத்ர் ஜ்ஞேய பாவ ஸம்பந்தத்தையும்; த்விதீயபதமான நமஸ்ஸாலே - “ఈశానో భూతభవ్యస్య” (ஈசாநோபூதபவ்யஸ்ய) என்றும், “స్వత్వమాత్మనిసఞ్జాతం స్వామిత్వంబ్రహ్మణిస్థితమ్” (ஸ்வத்வமாத்மநிஸஞ்ஜாதம்ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்த்திதம்) என்றும், “உலகமூன்றுடையாய்” என்றுஞ் சொல்லுகிறபடியே, ஸ்வஸ்வாமிபாவ ஸம்பந்தத்தையும்; த்ர்தீயபதமான நாராயணபதத்தில் நாரமென்கிற அம்சத்தாலே - “యస్యాత్మా శరీరం యస్య పృథివీ శరీరమ్” (யஸ்யாத்மா சரீரம் யஸ்ய ப்ர்திவீ

சரீரம்) என்றும், "ஜகத்ஸர்வம் ஶரீரம்தே" (ஜகத்ஸர்வம் சரீரம்தே) என்றும், "உம்முயிர் வீடுடையானிடை" என்றுஞ் சொல்லுகிறபடியே, சரீரசரீரிபாவஸம்பந்தத்தையும்; அயநம் என்கிற அம்சத்தாலே - "ஸதாயதநாः" (ஸதாயதநாஃ) என்றும், "மயி ஸர்வ மிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ" (மயிஸர்வ மிதம்ப்ரோதம் ஸூத்ரேமணிகணா இவ) என்றும், "மூவுலகும் தன்னெறியாவயிற்றிற்கொண்டு நின்றொழிந்தார்" என்றுஞ் சொல்லுகிறபடியே, ஆதாராதேயபாவ ஸம்பந்தத்தையும்; வ்யக்தசதுர்த்யம்சத்தாலே - "அஹமன்னமஹமன்னம்" (அஹமந்ந மஹமந்நம்) என்றும், "போக்தாரம் யஜ்ஞதபஸாம்" (போக்தாரம் யஜ்ஞதபஸாம்) என்றும், "என்னைமுற்று முயிருண்டு" என்றுஞ் சொல்லுகிறபடியே போக்த்ர்போக்யபாவஸம்பந்தத்தையும் சாப்தமாகச் சொல்லுகையாலே, இது இருவர்க்குமுண்டானநவவிதஸம்பதந்தத்தை ப்ரதிபாதிக்கக்கடவதாயிருக்குமிறே.

ஏவம் விதமான சம்பந்தத்தை, "அறியாதனவறிவித்த" என்கிறபடியே - ஒராசார்யன அஜ்ஞாதஜ்ஞாபநம்பண்ண இச்சேதநன் தெளியவறிந்தபின்பிறே ; இவனுக்கு "கண்ணபுரமொன்றுடையானுக் கடியேனொருவர்க்குறியேனோ" என்றிருக்கையாகிற ஸ்வரூபத்தி

லுணர்த்தியும், "என்நான்செய்கேன் யாரேகளைகண்" என்றிருக்கையாகிற ஸ்வரக்ஷணத்தில் அசக்தியும், "உன்னைலல்லால்யாவராலுமொன்றுங்குறைவேண்டேன்" என்றிருக்கை யாகிற ப்ராபகத்தில் அத்யவஸாயமும், "மாக வைகுந்தங் காண்பதற்கென்மன மேகமெண்ணும்" என்றிருக்கையாகிற ப்ராப்யத்தில் த்வரையும், "பாம்போடொருகூரையிலே பயின்றாப்போல்" என்றிருக்கையாகிற விரோதியில் பீதியும், "அவனடியார் சிறுமாமனிசராயென்னை யாண்டா ரிங்கேதிரிய" என்றிருக்கையாகிற உத்தேச்யவிஷயத்தில் கௌரவமும், "பெரியார்க்காட்பட்டக்கால் பெறுதபயன் பெறுமாறு" என்றிருக்கையாகிற உபகாரவிஷயத்தில் க்ருதஜ்ஞதையும், "ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்" என்றிருக்கையாகிற உத்தாரகவிஷயத்தில் ப்ரதிபத்தியும், அவனுடைய நிருபாதிக சேஷித்வத்தையும் தன்னுடையநிருபாதிகசேஷத்வத்தையும் தெளியவறிகையாகிற ஸம்பந்தஜ்ஞாநமும், அவனுடைய நிருபாதிகசரீரித்வத்தையும் தன்னுடைய நிருபாதிக சரீரத்வத்தையும் தெளியவறிகையாகிற ஸம்பந்த யாதாத்ம்ய ஜ்ஞாநமும், அவனுடைய நிருபாதிக தர்மித்வத்தையும் தன்னுடைய நிருபாதிக தர்மத்வத்தையும் தெளியவறிகையாகிற ஸம்பந்தஸ்வரூபஜ்ஞானமும், தர்மாதர்மிகளுடைய

விசேஷைக்யத்தாலே அவனையாய் "தானில்லை" என்னலாம்படி யிருக்கையைத் தெளிய வறிகையாகிற ஸம்பந்தஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநமும், பகவத்தாஸ்யத்தையே யிட்டு ஸதாசாரத்தை நெகிழாதே, சப்தாதி விஷயங்களில் அச்சமும் கைங்கர்யாபாவத்தில் ஆர்த்தியும் விளைகையாகிற சேஷத்வத்தில் கர்த்ர்த்வாதி நிவர்த்தியும், நிஷித்தங்களைவிட்டு விஹிதங்களைப்பற்றினவாறே "நான்ஜ்ஞாதாவாகையாலேயன்றோ என்னை அவனங்கீகரித்தது" என்று தன் ஜ்ஞாத்ர்த்வத்தை இட்டு இறுமாவாதே யிருக்கையாகிற ஜ்ஞாத்ர்த்வத்தில் கர்த்ர்த்வ நிவர்த்தியும், "நிஷித்தங்களைவிட்டு விஹிதங்களைப் பற்றினவாறே யன்றோ என்னை யவனங்கீகரித்தது" என்று தன்ப்ரவர்த்திநிவர்த்திகளையிட்டு இறுமாவாதே யிருக்கையாகிறகர்த்ர்த்வத்தில் கர்த்ர்த்வ நிவர்த்தியும், அவனுக்குத் தானடிமை செய்யுமிடத்தில் அது ஸ்வரஸத்துக்குடல் என்றிராதே அவயவபூதமான இவ்வாத்மவஸ்து அவயவியான எம்பெருமானுக்கு எடுத்துக் கைநீட்டுகிற தென்றிருக்கை யாகிற போக்த்ர்த்வத்தில் கர்த்ர்த்வ நிவர்த்தியும் துடக்கமான ஆகாரவிசேஷ முண்டாகிறது.

(அந்தரங்கசம்பந்தங்காட்டி) இஸ்ஸம்பந்தந்தான், "ప్రాప్తం లక్ష్మీపతేర్దాస్యం శాశ్వతం పరమాత్మనః" "ப்ராப்தம் லக்ஷ்மீ

பதேர் தாஸ்யம் ஶாஶ்வதம் பரமாத்மநஃ” என்றும், “దాసభూతాస్స్వతస్సర్వేహ్యాత్మానః పరమాత్మనః” “தாஸபூதாஸ்ஸவதஸ்ஸர்வே ஹ்யாத்மாநஃ பரமாத்மநஃ” என்றும், “நாராயணன் திருமால் நாரம் நாமென்னுமுறவு ஆராயில் நெஞ்சே அநாதியன்றோ” என்றும் சொல்லுகிறபடியே —வந்தேறியன்றிக்கே, அநாதியாய் போருகையாலே (காட்டி) என்கிறார். முன்கண்டாரிருக்குமதிறே — லோகத்திலே காட்டக்கடவது ; இஸ்ஸம்பந்தத்தை யொருவன் வெளியிட்டுக்கொடுக்கப் பெறுமையாலே, “ யானேயென்னை யறியகிலாதே யானே யென்றனதே யென்றிருந்தேன்” என்கிறபடியே— நெடுங்காலம்தன்னை யுள்ளபடியறியமாட்டாமல் தேஹாத்மாபிமாநியாய்,*மாறிமாறிப்பலபிறப்பும்பிறந்து மற்றோர்தெய்வம் பாடியாடிப்பணிந்து*வழிதிகைத்து,“అసన్నేవ”“அஸந்நேவ” என்றும், “பொருளல்லாத” என்றும் சொல்லுகிறபடியே—உருமாய்ந்துநித்யஸாரியாய்ப் போந்திருந்து, “ మకారేణస్వతన్త్రస్స్యాత్ ” “மகாரேண ஸ்வதந்த்ரஸ்ஸ்யாத்” என்கிறபடியே—பதத்வயாத்மகமான நமஸ்ஸில் ஸ்வஸ்வாதந்த்ர்யப்ரதிபாதகமான மகாரத்தினுடைய அர்த்தத்தையுட்கொண்டருளிச்செய்கிறார் (தடைகாட்டி) கீழ்ச்சொன்ன இஸ்ஸம்பந்தஜ்ஞாநத்துக்கும், ப்ரதிஸம்பந்தியான ஈச்வரனிடத்தில்

பரத்வப்ரதிபத்திக்கும், சேதநனிடத்திலே பகவதநந்யார்ஹசேஷத்வப்ரதி பத்திக்கும், மேல் சொல்லுகிற *திவமென்னும் வாழ்வாகிற கைங்கர்யத்தில் ப்ராப்யத்வப்ரதிபத்திக்கும், *சேர்ந்த நெறியாகிற அவன்றிருவடிகளில் ப்ராபகத்வப்ரதிபத்திக்கும் விரோதியின்னதென்னு மிடத்தை வெளியிட்டுக்கொடுத்து. அவ்விரோதி யாகிறது— அபரவஸ்துக்களில் பரத்வபுத்தியும், அரக்ஷ்யரிடத்தில் ரக்ஷகத்வபுத்தியும், அநீச்வரனிடத்தில் ஈச்வரத்வபுத்தியும், அசேஷிகளிடத்தில் சேஷித்வபுத்தியும், அநுபாஸ்யரிடத்தில் உபாஸ்ய புத்தியும், அநாத்மாவில் ஆத்மபுத்தியும், அஸ்வதந்த்ரனான தன்னிடத்தில் ஸ்வதந்த்ரபுத்தியும், அநுபாயங்களில் உபாயத்வபுத்தியும், அபந்துக்களில் பந்துத்வபுத்தியும், அபோக்யங்களில் போக்யதா புத்தியும், பகவத்கைங்கர்யத்தில் ஸ்வபோக்த்ர்த்வ புத்தியும், இவையெல்லாவற்றுக்கும் வேர்ப்பற்றான அஹங்காரமமகாரங்களும். இவ்விரோதிவர்க்கத்தையிறே, "పురతః పృష్ఠతశ్చైవ స్థానతశ్చ విశేషతః। నమసాఽభీక్ష్యతే రాజన్" "புரதஃபார்ஷ்டதஶ்சைவஸ்தாநதஶ்ச விசேஷதஃ - நமஸாவீக்ஷ்யதே ராஜந்" என்றும், "ఈక్షితే న పురతః పశ్చాదపి స్థానతః" "ஈக்ஷிதே நபுரதஃபஶ்சாதபிஸ்தாநதஃ" என்றும்சொல்லுகிறபடியே- காகாக்ஷிந்யாயேநப்ரதம சரம பதங்களோடே அந்வித

மாயும், ஸ்வதஏவ ஸ்தாநியான நமஸ்ஸோடே அந்விதமாயிருந்துள்ளஸகண்டநமஸ்ஸில் ஷஷ்ட்யந்தமான மகாரம் காட்டுகிறது. ஏவம்பூதமான இந்தவிரோதி வர்க்கத்தைக் காட்டுகையாவது-నారాయణం పరిత్యజ్య హృదిస్థంపతిమీశ్వరమ్ । యోన్యమర్చయతేదేవం పరబుద్ధ్యాసపాపభాక్'' ''நாராயணம்பரித்யஜ்ய ஹ்ர்திஸ்தம் பதிமீச்வரம் - யோந்யமர்ச்சயதேதேவம் பரபுத்த்யாஸபாபபாக்'' என்றும், ''స్వాతన్త్ర్యమన్య శేషత్వం ఆత్మాఽపహరణంవిదుః'' ''ஸ்வாதந்த்ர்ய மந்யசேஷத்வம் ஆத்மாபஹரணம்விதுः'' ''ఈశానన్యార్హ శేషత్వంవిరుద్ధంత్యాజ్యమేవతత్'' ''ஈசாநந்யார்ஹசேஷத்வம்விருத்தம் த்யாஜ்யமேவதத்'' என்றும், ''వాసుదేవంపరిత్యజ్యయోఽన్యందేవముపాసతే। తృషితోజాహ్నవీతీరేకూపంఖనతిదుర్మతిః'' ''வாஸுதேவம் பரித்யஜ்யயோந்யம் தேவமுபாஸதே - த்ர்ஷிதோஜாஹ்நவீதீரே கூபம்கநதிதுர்மதிः'' என்றும், ''ఉపాయాపాయసంయోగేనిష్ఠయాహీయతేఽనయా'' ''உபாயாபாயஸம்யோகேநிஷ்டயாஹீயதே நயா'' என்றும், ''విషయాణాన్తుసంయోగాద్యోఽభిభర్తిసుఖన్నరః । నృత్యతఃఫణినశ్ఛాయాంవిశ్రమాయాశ్రయేతసః'' ''விஷயாணாந்து ஸம்யோகாத் யோபி பர்த்திஸுகந்நரः - ந்ர்த்யதஃபணிநஶ்சாயாம்விச்ரமாயாச்ரயேதஸः'' என்றும், ''అహఙ్కారార్థకామేషు ప్రీతిరద్యైవనశ్యతు'' '': அஹங்காரார்த்த காமேஷுப்ரீதிரத்யைவநஶ்யது'' என்றும் சொல்லுகிறபடியே—ஸர்வே

ச்வரன் துடக்கமானுரிடத்தில் பரத்வாதி ப்ரதிபத்திக்கு விரோதியான இந்த விபரீத புத்தி த்யாஜ்யமென்னுமிடத்தை ஸநிதர்சநமாகவும், ஸோபபத்திகமான ஸ்வோபதேசத்தாலேவிசததமமாம்படி வெளியிட்டுக்கொடுக்கை.

அநந்தரம், "సాధనంనమసాతథా" "ஸாதநம் நமஸாததா" "తస్మాచ్చతుర్థ్యాన్ మన్త్రస్యప్రథమందాస్యముచ్యతే" "தஸ்மாசதுர்த்யாந்மந்த்ரஸ்ய ப்ரதமம் தாஸ்யமுச்யதே" என்று சொல்லுகிறபடியே — உபாயவாசியான நமஸ்ஸினுடையவும், ஸர்வதேசஸர்வகால ஸர்வாவஸ்தோசிதமான கிஞ்சித்காரத்துக்கு ப்ரகாசமாயிருந்துள்ள வ்யக்த சதுர்த்தியினுடையவும் அர்த்தத்தை யுட்கொண்டு அருளிச்செய்கிருர் (உம்பர்திவமென்னும் வாழ்வுக்குச் சேர்ந்த நெறி காட்டுமவன்) "దేవానాం పూరయోధ్యా" 'தேவாநாம்பூரயோத்யா" என்றும், "வானவர்நாடு" என்றும் சொல்லுகிறபடியே — இவ்வருகிருப்பார்க்கெல்லாம் மேலாயிருந்துள்ள நித்யஸூரிகளுக்கு இஷ்டவிநியோகார்ஹமாய், "தெளிவிசும்பு திருநாடு" என்றும் "అత్యర్కానలదీప్తంతత్స్థానంవిష్ణోర్మహాత్మనః" "அத்யர்க்காநலதீப்தம் தத்ஸ்தாநம்விஷ்ணோர்மஹாத்மநః" என்றும்சொல்லுகிறபடியே— நிரவதிகதேஜோரூபமாய், "త్రిపాదస్యామృతందివి" "த்ரிபாதஸ்யாம்ர்தம்திவி" என்றும் "త్రిపదాద్విరాట్" "த்ரிபதாத்விரா

ட்" என்றும் சொல்லுகிறபடியே — ஸர்வேச்வரனுக்கு போக்ய போகோபகரண போகஸ்தாந ரூபேண இருந்துள்ள த்ரிபாத்விபூதியிலே, "[illegible]" "நசபுநராவர்த்ததே" என்றும், "[illegible]" "அநாவ்ர்த்திச்சப்தாத்" என்றும், "மீட்சியின்றி வைகுந்தமாநகர்" என்றும்சொல்லுகிறபடியே— புநராவ்ர்த்தியின்றிக்கே நித்ய கைங்கர்யத்திலே நிரதராயிருக்கையாகிற வாழ்வுக்கு நேரே அநுரூபமான உபாயத்தை வெளியிட்டுக் கொடுக்குமவன். (உம்பர் திவம்) தேசிகனைப்போலே தேசத்தையும் ததீயரையிட்டு நிரூபிக்கவேண்டி யிருக்கும்போலே காணும். "திவம்" என்றுசொன்னதுக்கடி—"பொன்னுலகு" என்னும்படியான நிலமிதுவாய்த்து என்றும், "[illegible]" "இமாங்லோகாங் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந்" என்றும், ஸ்வைரஸஞ்சரணமாகையாலேயிறே விரோதி என்றும். (வாழ்வுக்கு) நித்ய கைங்கர்ய மென்றும், வாழ்ச்சியென்றும், பர்யாயம்போலேகாணும். "வேங்கடத்தைப்பதியாக வாழ்வீர்காள்" என்னக்கடவதிறே. (சேர்ந்தநெறி) அநுரூபமான வுபாயம். வாழ்வுக்குச்சேர்ந்த நெறியென்று — ப்ராப்யப்ராபகங்களைச்சேர ஒன்றுக்கொன்று ஸத்ர்சமாகவருளிச்செய்தது;—ஸ்வீகாரவிஷயபூதன்—ப்ராபகம், பரிசர்யாவி

ஷயபூதன்—ப்ராப்யம் என்கையாலே, இவ்விரண்டினுடையவும் ஐக்யத்தைப்பற்ற உபாயப்ரகரணத்தில் "இதுதன்னைப் பார்த்தால்" இத்யாதிகளில்சொல்லுகிற உபாயவைபவத்தை, "சேர்ந்த" என்கிறவிசேஷணத்தால்ஸூசிப்பித்தருளுகிறாராய்த்து. (சேர்ந்தநெறி) என்கையாலே—சேர்ந்தநெறியுமுண்டாயிருக்குமாகாதேதான். அதாகிறது—(భక్త్యాపరమయావాపి) "பக்த்யாபரமயாவாபி" என்கிறபடியே—"மோக்ஷஸாதநத்வேந வேதாந்தங்களில் விஹிதமாய்த்தல்ல" இத்யாதிப்படியே விவேகாதி ஸாதநஸப்தகஸாத்யமாய், த்ருவாநுஸ்ம்ர்திரூபமாய், கீழ்ச்சொன்ன ப்ராப்யத்துக்குஅத்யந்தவிஸத்ர்சமாய் விளம்ப பலப்ரதமாயிருக்கும் பக்த்யுபாயம் (காட்டுமவனன்றே ஆசாரியன்) இப்படி, (அம்பொனரங்கர்க்கு) என்று - உபயலிங்கத்வவிசிஷ்டமான பரஸ்வரூபத்தையும், (ஆவிக்கு) என்று—ததநந்யார்ஹசேஷமான ஸ்வஸ்வரூபத்தையும், (தடை) என்று — த்யாஜ்யமானவிரோதிஸ்வரூபத்தையும், (திவமென்னும் வாழ்வுக்கு என்று—ஏதந்நிவர்த்யநந்தரபாவியான புருஷார்த்த ஸ்வரூபத்தையும், (சேர்ந்தநெறி) என்று—இப்புருஷார்த்தத்துக்கு ஸத்ர்ஸஸாதநமான உபாயஸ்வரூபத்தையும், திருமந்த்ரோபதேசமுகேந ஸங்க்ரஹமாகவும் ஸவ்யக்தமாகவும் வெளியிட்டுக் கொடுக்குமவனன்றே ஸதாசாரியனாகிறானென்கிறார்

இப்படி உபதேஶிக்குமவனுக்கிறே. "ఆచినోతిహి శాస్త్రార్థానాచారేస్థాపయత్యపి। స్వయమాచరతేయస్తు సఆచార్య ఇతీరితః" "ஆசிநோதிஹிஶாஸ்த்ரார்த்தாநாசாரேஸ்த்தாபயத்யபி-ஸ்வயமாசரதேயஸ்து ஸஆசார்ய இதீரிதஃ" என்று சொல்லுகிற ஆசார்ய லக்ஷண முள்ளது. "நேரே ஆசார்யனென்பது—ஸம்ஸாரநிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை உபதேஶித்தவனை" என்கிற திவ்யஸூக்தியை யுட்கொண்டு (காட்டுமவனன்றோ ஆசாரியன்) என்று ப்ரஶித்திதோன்ற வருளிச்செய்கிறார்.

அ.—இரண்டாம்பாட்டு. இப்படி ஸ்வாபதேஶத்தாலே அர்த்தபஞ்சகஜ்ஞாந முண்டாம்படி விஷயீகரித்தருளி, எதந்முகேந மஹோபகாரகனான ஸ்வாசார்யன் பக்கலிலே, "அறியாதனவறிவித்த வத்தா நீசெய்தன வடியேனறியேனே" என்றும், "என்னைத் தீமனங்கெடுத்தாய்" என்றும், "மருவித்தொழும் மனமேதந்தாய்" என்றும் சொல்லும்படியான உபகாரஸ்ம்ர்தியாலே, "తథామన్త్ర ప్రదేగురౌ। త్రిషుభక్తిస్సదాకార్యా" "ததாமந்த்ரப்ரதேகுரௌ - த்ரிஷுபக்தி ஸ்ஸதாகார்யா" என்கிறபடியே— * மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்குள்ளீடான வஸ்துவிலும்பண்ணக்கடவ ப்ரேமத்திற் காட்டில் அதிஶயிதமான ப்ரேமமில்லாதார், ஸ்வஸ்பர்ஶமாத்ரத்தாலே முடிக்கவற்றான

விஷத்திலு மதிக்ரூரராய், அத்தைப்போலே நஶ்வரமான ஶரீரத்தை நஶிப்பித்து விடுகையன்றிக்கே நித்யமான ஆத்மவஸ்துவை நஶிப்பித்து விடுமவரென்கிறார்.

மூ.—அஞ்சுபொருளுமளித்தவன்பாலன்பிலார்
நஞ்சில்மிகக்கொடியர்நாம்சொன்னோம்-நஞ்சுதான்
ஊனை முடிக்கு மதுயிரை முடிக்குமென்
றீனமிலார்சொன்னாரிவை.

ப-ரை.—அஞ்சுபொருளும் - ஸ்வஸ்வரூப பரஸ்வரூப புருஷார்த்தஸ்வரூப உபாயஸ்வரூப விரோதிஸ்வரூபங்களாகிற அர்த்த பஞ்சகத்தையும், அளித்தவன்பால் - பரமக்ருபையாலே உபதேசித்த ஆசார்யன்பக்கல், அன்பு இலார்- ப்ரேமம் இல்லாதவர்கள், நஞ்சில் - விஷத்தைக்காட்டிலும், மிக - மிகவும், கொடியர் - க்ரூரர், இவ்வர்த்தத்தை எல்லாருமறியும்படியாக, நாம் - பிள்ளை லோகாசார்யர் திருவடிகளுக்கு சேஷபூதரான நாம், சொன்னோம்—; எங்ஙனேயென்னில்; நஞ்சு - விஷமானது, ஊனை - மாம்ஸத்தாற் செய்யப்பட்ட சரீரத்தை, முடிக்கும் - தொட்டமாத்ரத்திலே முடித்துவிடும்; அது - தன்னைத்தானே முடிக்குமவனை இவன், உயிரை - ஆத்மாவினுடைய ஸ்வாபாவிகாகாரத்தை, முடிக்கும் - தானே முடித்துவிடுவன், என்று - என்கிற, இவை- இவ்வர்த்தத்தை, ஈனம்இலார் - ஸ்வாசார்யன்பக்கல் ப்ரேமமற்றிருக்கையாகிற தாழ்வு இல்லாத நம் பூர்வாசார்யர்கள், சொன்னார் - அருளிச் செய்தார்கள். (௨)

வ்யா.—( அஞ்சுபொருளும் இத்யாதி ) "உய்யும் வகை" என்றும், "நின்றவொன்றை யுணர்ந்தேனுக்கு" என்றும், "நன்கறிந்தேன்" என்றும், "உணர்வினுள்ளே"

என்றும், "ஆம்பரிசு" என்றும் அவஶ்ய ஜ்ஞாதவ்யதயா அறுதியிடப்பட்ட அர்த்த பஞ்சகத்தையு முபதேஶித்த ஆசார்யன்பக்கல் ப்ரேமமற்றிருக்குமவர்கள். (அஞ்சு பொருளும்) இவ்வர்த்த பஞ்சகத்தி லோரொன்றை யுபதேஶித்த வளவிலே கைவாங்கி யிருந்தானாகிலன்றோ இவன் ப்ரேமமற்றிருக்கலாவது. (அஞ்சு பொருளும்) "వదన్తి సకలా వేదాః," "வதந்தி ஸகலாவேதாः" என்கிற படியே - வேதைகஸமதிகம்யமான அர்த்தபஞ்சகத்தையிறே இவனுபதேஶிப்பது. (அளித்தவன்) இவ்வர்த்த பஞ்சகத்தை, "సేవయోపదేక్ష్యన్తి" "ஸேவயா உபதேஶ்யந்தி" என்றும், "குருக்களுக்கநுகூலராய்" என்றும் சொல்லுகிறபடியே-ஸ்வாநுவ்ர்த்தியாலே ப்ரஸந்நனாய்க்கொண்டு உபதேஶிக்கை யன்றிக்கே, "பயனன்றாகிலும் பாங்கலராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்" என்கிறபடியே - இத்தலையிலே தேனுமொரு நன்மையாதல் த்ர்ஷ்ட ப்ரயோஜநத்தையாதல் தன்னிடத்தியி லாசார்யபதத்தை யாதல் க்யாதிலாப பூஜைகளை யாதல் "ప్రబ్రూయాత్" "ப்ரப்ரூயாத்" என்று ஒருவிதி பாரதந்த்ர்யத்தையாதல் கணிசியாதே, "కృపయా నిస్పృహో వదేత్" "க்ர்பயா நிஸ்ப்ர்ஹோவதேத்" என்கிறபடியே - தங்கள் துர்க்கதியே பற்றாசாகவுண்டான பரமக்ர்பையாலே நிரபேக்ஷனாய்க்கொண்டு உபதேஶித்தருளினவன். (அளித்

தவன்) "𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑍁𑌰𑌧𑍍𑌯𑌾𑌪𑍍𑌯" "ஶுஶ்ரூஷுரத்யாத்ய" என்கிறபடியே - அவஶ்யம் கர்த்தவ்யதயா விஹிதையான ஶுஶ்ரூஷைமுன்னாக உபதேஶித்தவனாகிலிறே யிவனுக்கு ப்ரேம மற்றிருக்கலாவது; இத்தலையிலர்த்தித்வமுங்கூட இல்லாதிருக்க, முலைக்கடுப்பாலே பீச்சுவாரைப்போலே, க்ர்பை வரம்பிட்டுக்கொடுக்க தத்பரதந்த்ரனாய்க்கொண்டு அளித்தானாய்த்து. (அன்பிலார்) அங்கீகரிக்கில், "உங்குருக்கள் தம் பதத்தே வையுமன்புதன்னை யிந்தமாநிலத்தீர்" என்று தத்த்வதர்ஶிகளாலே அவஶ்யம் கர்த்தவ்யதயா அறுதியிடப்பட்ட ப்ரேமமில்லாதவர்கள்.

ஏவம்பூதரான விவர்கள்படி யெங்ஙனே யென்னில் (நஞ்சில் மிகக்கொடியர்) நஞ்சுகொடிது; இவர்கள் மிகக்கொடியர். விஷம் க்ரூரமா யிருக்கும்; இவர்கள் அதிலுங்காட்டில் க்ரூரராயிருப்பர்கள்.

இவ்வர்த்தத்தை யறியும்படி யெங்ஙனே யென்ன (நாம்சொன்னோம்) வேறொரு ப்ரமாணங் கொண்டாதல் உபதேஶம்கொண்டாதல் அறியவேண்டாதபடி, அவதார விஶேஷமான பிள்ளைலோகாசார்யருடைய திருவடிகளிலே சிரகாலம் ஸேவைபண்ணி, தத்வஹித புருஷார்த்தங்களை சரமபர்யந்தமாக வருளிச்செய்யக் கேட்டு தந்நிஷ்டராயிருக்கிற நாம்சொன்னோம். பிள்ளைலோகாசார்யர் திரு

வடிகளை ஆஶ்ரயித்த தமக்கு ஸப்ரஹ்மசாரிகளான கூர குலோத்தம தாஸர் துடக்கமானாரைக் கூட்டிக்கொண்டு (நாம்) என்கிறார். நாம் அறுதியிட்ட அர்த்தம் என்று லோகம் பரிக்ரஹிக்கும்படியான பெருமதிப்பராய் ஆப்த தமராய் ஸர்வஜ்ஞராயிருக்கையாலே (நாம்சொன்னோம்) என்கிறார். (சொன்னோம்) "சொல்லுமவிடு சுருதியாம்" என்னும்படியான ஏற்றமுடையதாயும் "ఋషీణాంపునరాద్యానాం వాచమర్థోనువర్తతే" "ரிஷீணாம் புநராத்யாநாம் வாசமர்த்தோநுவர்த்ததே" என்னும்படி அர்த்தஸ்பர்ஶியாயுமிறே தத்வதர்ஶிகளா யிருப்பார்வார்த்தை யிருப்பது.

நஞ்சின்கொடுமை யெங்ஙனே? இதின் கொடுமை யெங்ஙனே? என்ன; அவ்விரண்டையும் அடைவே தர்ஶிப்பிக்கிறார் மேல் (நஞ்சுதான்) இத்யாதி. ஊனாகிறது - மாம்ஸமாய், ஊனையென்றது - மாம்ஸப்ரசுரமான ஶரீரத்தையென்றபடி. மாம்ஸத்தைச்சொன்னவிது மற்றும் அதிலுண்டான அஸ்ர்க்பூயவிண்மூத்ரஸ்நாயுமஜ்ஜாஸ்திகளுக்கெல்லா முபலக்ஷணம். "మాంసాసృక్ పూయవిణ్మూత్రస్నాయుమజ్జాస్థిసంహతౌ దేహే" "மாம்ஸாஸ்ர்க்பூயவிண்மூத்ரஸ்நாயுமஜ்ஜாஸ்தி ஸம்ஹதௌதேஹே" என்று - மாம்ஸாதிமயமாக விறே இத்தேஹத்தை நிரூபகராயிருப்பார் நிரூபிப்பது. "புண்ணைமறைய வரிந்து" என்கிறபடியே - தோலை

(க)மேவிக் (உ)கைப்பாணியிட்டு மெழுக்குவாசியாலே ப்ர மிக்கும்படி பண்ணிவைக்கையாலே ஆந்தரமானமாம்ஸா திகள் நேராகத்தோற்றுகின்றனவில்லை; "యదినామాస్య దేహస్య † యదన్తస్తద్బహిర్భవేత్ । దణ్డమాదాయలోకోయం శునః కాకాన్నివారయే త్ †" "யதிநாமாஸ்யதேஹஸ்யயதந்தஸ்தத்பஹிர்பவேத்- தண்டமாதாயலோகோயம் ஶுநஃகாகாந்நிவாரயேத்" என்கிறபடியே - அகவாய்புறவாயானால் (ங) காக்கைநோக்கப் (ச) பணிபோரும்படியிவைநேர் கொடுநேர் தோற்றுமிறே. ஆனாலும், மாம்ஸப்ரசுர மாகையாலேயன்றோ? "ஊன்" என்றும் "ஊனில்வாழுயிர்" என்றும் "ஊனேய் குரம்பை" என்றும் ஆழ்வார்கள் நிர்த்தேசித்தவோ பாதி, இவரும் (ஊனே) என்று நிர்த்தேசித்தருளுகிறார். "శరీరం వ్రణవత్పశ్యేత్" "ஶரீரம்வ்ரணவத்பஶ்யேத்" என்று சொன்னாருமுண்டிறே. (நஞ்சுதானூனைமுடிக்கும்) (ఉప భుక్తం విషం హన్తి) "உபபுக்தம்விஷம்ஹந்தி" என்கிறபடியே— விஷமானது, ஸ்பர்ஶமாத்ரத்தாலே மாம்ஸ ப்ரசுரமான ஶரீரத்தைமுடிக்கவற்றாயிருக்கும். முடிக்கையிலதுக்குண்டான ப்ராதாந்யந்தோற்ற (நஞ்சுதான்) என்கிறார்.

---

(க) மேவி-போர்த்து. (உ)கைப்பாணி-மணியாசநம் (ங)காக்கைநோக்க-காக்கைகுத்தாமல்பார்க்க. (ச) பணி-க்ரிஷி. † "காயஸ்ய" என்றும் "காகாம்ச்சவாரயேத்" என்றும் பாடாந்தரம்.

முடிக்குமென்றது - ப்ராயிகாபிப்ராயம். மணிமந்த்ராதிகளுண்டாம்போது முடிக்கமாட்டாதிறே.

(அதுஉயிரைமுடிக்கும்) "என்றுமனைத்துயிர்க்கு மீரஞ்செய்நாரணனும்-அன்றும் தன்னரியன்பாலன் பொழியில்" என்கிறபடியே-ஆசார்யன்பக்கல் ப்ரேமமில்லாதான், ஸர்வஸஹ்ருதான ஈஶ்வரனுங்கூட * க்ஷிபாமி * ந க்ஷமாமிகளைப்பண்ணிக் கைவிடும்படிக்கு இலக்காயிருப்பானொருவனுகையாலே; (సఆత్మహా) "ஸஆத்மஹா" என்கிறபடியே-இவன்நித்யமான ஆத்மவஸ்துவை முடித்துக்கொள்ளுமவன்.

(நஞ்சு தானித்யாதி)விஷமானது, "శరీరాకృతిభేదాస్తు భూపైతేకర్మయోనయః" "ஶரீராக்ருதிபேதாஸ்துபூபைதேகர்மயோநய:" என்னும்படியே-வந்தேறியான ஶரீரத்தை முடித்து ஆத்மாவினுடைய ஸ்வாபாவிகாகாரத்துக்கு ஒரிடைச்சுவரைப் போக்கும்; இவன், ஆத்மாவினுடைய ஸ்வாபாவிகாகாரத்தை முடித்து, "அழுக்குடம்பும்-இனியாமுறுமை" என்னும்படி துஸ்ஸஹமான ஶரீரத்தைப்பூண்கட்டிக் கொண்டு நித்யஸம்ஸாரியா யிருக்கும். நஞ்சின் வ்யாபாரம், "ஆக்கை விடும் பொழுதெண்ணே" என்றும் "இந்தவுடம்பொடினி யிருக்கப்போகாது" என்றும் சொல்லுகிறபடியே-இது த்யாஜ்யமென்னும் ப்ரதிபத்தியுண்

டாய் அத்தைக் கழித்துக்கொள்ளவேணு மென்றிருக்கும் ஜ்ஞாநவிஶேஷயுக்தர்க்கு இங்ஙனேயாகிலு மிவ்விரோதி யிவனுக்குக் கழியப்பெற்றதிறே என்று உகக்கைக் குறுப்பாய்க்கொண்டு அபிமதமாயிருக்கும்; இவன் வ்யாபாரம், "உயிர் மாய்தல்கண்டு ஆற்றேன்" என்றும், "உலகினதியல்வே!" என்றும் சொல்லுகிறபடியே ஆண்டாளுக்கு வீரஸுந்தரன் செயல் அநபிமதமானவோபாதி அவர்கள் நோவுபாட்டுக்கும் ஸ்வோத்கர்ஷத்துக்கும் வெறுப்புக்கு முறுப்பாய்க் கொண்டு அநபிமதமாயிருக்கும். ஆசார்யவிஷயீகாரத்தைப்பெற்றும் இவனிப்படி தன்னைத் தானே முடிப்பானொருவனாகையாலே, அஸத்ப்ராயனென்றும், அத்ரஷ்டவ்யனென்றும் நினைத்து, படர்க்கையாக (அது) என்கிறார். உம்மைப்போலே மற்றை ஆராகிலும் இங்ஙன் சொன்னாருண்டோ? என்ன (ஈனமிலார்) இத்யாதி. நாமேயன்று, நமக்கு தேஶிகராயிருப்பாரும் இவ்வர்த்தத்தைச் சொன்னாரென்கிறார். (என்று-இவை-ஈனமிலார் சொன்னார்) நஞ்சுதான் அநித்யமான ஶரீரத்தை முடிக்கும், ஆசார்யன்பக்கல் ப்ரேமமில்லாதான் நித்யமான ஆத்மவஸ்துவை முடிக்கும் என்கிற இவ்வர்த்தத்தை, ஸ்வாசார்யன் பக்கல் ப்ரேமமற்றிருக்கையாகிற தாழ்வில்லாத நம்பூர்வாசார்யர்கள், "விஷதரகிரீ ஸூதிவிஷய: கிலஐகிநம்ரு ஹாவத நீ விதர்யாம்ஸ:| யதயன்ரூ கிலத்வே ஷிஹ்புந:ஹிவந:" "விஷ

தரதோப்யதிவிஷமஃகில இதிநம்ர்ஷாவதந்திவித்வாம்ஸஃ-யதயந்நகுலத்வேஷிபுநரபிஶூநஃ” என்று-லௌகிகர்விஷயமாக அபியுக்தர் சொன்னவோபாதி தந்தமமைப்பற்றியிருக்குமவர்களைப் பார்த்துத் தாந்தாமோருக்திகளாலே விஶதமாகச் சொன்னார்கள். ஆசார்யவிஷயத்தில் ப்ரேமமற்றிருக்குமதிற்காட்டில் நிஹீநதையில்லை யென்றும், இதில்லாததிற்காட்டில் வேறே உத்கர்ஷ மில்லையென்றும் திருவுள்ளம்பற்றி (ஈனமிலார்) என்கிறார்காணும். (சொன்னார்) அவர்கள் கரணத்ரய ஸாரூப்யமுடையராயிருப்பார் சிலரிறே. (சொன்னாரிவை) “యద్వచస్సకలంశాస్త్రమ్” “யத்வசஸ்ஸகலம்ஶாஸ்த்ரம்” என்றும், “క్రీడార్థమపియద్బ్రూయుస్స ధర్మః పరమోమతః” “க்ரீடார்த்தமபியத்ப்ரூயுஸ்ஸதர்மஃ பரமோமதஃ” என்றும் சொல்லும்படிகாணும் அவர்கள் திவ்யஸூக்தியின் மெய்ப்பாடிருப்பது. ..... ௨

மூன்றாம்பாட்டு. ஸ்வாசார்யன்பக்கல் ப்ரேமமற்றிருந்தானேயாகிலும் அவனுபதேஶத்தாலே அர்த்தபஞ்சகம் முதலாக தாத்பர்யங்களோடினது, ஞானக்கலைகளான அவ்வவ்ஶாஸ்த்ரங்களைப் பரக்கக்கற்று அத்தால் பிறந்த ஜ்ஞாநவிஶேஷத்தாலே யிவனுக்கிடேறக் குறையென்னென்ன; அந்தப்ரேமமன்றிக்கேயுண்டாயிருக்கிற ஜ்ஞாநவிஷயமானது ‘ శ్రుతంతస్యసర్వంసఖ్యరణ్యే చవత్ ’ ‘ஶ்ருதம்தஸ்ய

ஸர்வம் குஞ்ஜரபௌசவத்" என்கிறபடியே-கஜஸ்நாநத்வோபாதி நிரர்த்தகமா யிருப்பதொன்றாகையாலே; ஆதலால், "நண்ணாரவர்கள் திருநாடு" என்னும்படி அதஃபதநமொன்றுமே காணும் இவர்களுக்கு பலித்துவிடுவதென்கிறார்.

மூ.—பார்த்தகுருவினளவில்பரிவின்றி
சீர்த்தமிகுஞாநமெல்லாம்சேர்ந்தாலும்—கார்த்தகடல்
மண்ணின்மேல்துன்புற்றுமங்குமே தேங்காமல்
நண்ணுமே கீழாநரகு.

ப - ரை.—பார்த்த - ஜ்ஞாநோபதேச முகத்தாலே கடாக்ஷித்தருளின், குருவின் அளவில் - ஆசார்யன் பக்கல், பரிவின்றி - ப்ரேமமில்லாதவனாய், சீர்த்த - ஸர்வேச்வரனை யுள்ளபடிஅறிவிக்கவற்றாகையாலே கனத்திருப்பதாய் மிகு - ச்லாக்யமான, ஞாநமெல்லாம் - எல்லாஜ்ஞானமும், சேர்ந்தாலும் - தன்பக்கல்குறைவின்றிக்கே யுடையனாயிருந்தானேயாகிலும், கார் - கறுத்த கடல்-ஸமுத்ரத்தாலே சூழப்பட்ட, மண்ணின்மேல் - இப்பூமியிலே, துன்பு உற்று - மிக்கதுக்கத்தை அநுபவித்து, மங்கும்-நசிப்பன். சரீராவஸாநகாலத்திலே, கீழாம் - ஸங்கம்கலசாதபடி துக்கமேயாயிருக்கையாலே மிகவும்தண்ணிதான, நரகு - நரகத்தை, தேங்காமல் - இடைவிடாமல், நண்ணுமே - கிட்டுவன் இதிலொருஸம்சயமில்லை என்கிறார். (௩)

வ்யா.—(பார்த்தவித்யாதி) (பார்த்தகுருவினளவில்) எதிர்சூழல்புக்குத் திரிகிற ஸர்வேஶ்வரனுங்கூட ஆந்தனையும் பார்த்து, இனிநம்மாலாகாது என்று கைவாங்கிக் கண்ணநீரோடே மீளும்படியான தன்னை, "பலமொன்றுங்

காணுமைகாணும் கருத்தர்'' என்கிறபடியே-க்யாதிலாப பூஜைகளில்கண்வையாதே உஜ்ஜீவநஹேதுவாய்க்கொண்டு நிர்ஹேதுகமாகக்கடாக்ஷித்தருளி, ''అజ్ఞానతిమిరాన్ధస్య జ్ఞానాఞ్జనశలాకయా । చక్షురున్మీలితంయేన'' ''அஜ்ஞாநதிமிராந்தஸ்ய ஜ்ஞாநாஞ்ஜநஶலாகயா - சக்ஷுருந்மீலிதம்யேந'' என்கிறபடியே - அஜ்ஞாநாந்தகாரத்தை வாஸநையோடேபோக்கவற்றான ஜ்ஞாநத்தை யுபதேஶித்து இப்புடைகளிலே மஹோபகாரகரான ஆசார்யன்பக்கலிலோ (பரிவின்றி) ''தன்குருவின் தாளிணைகள் தன்னிலன் பொன்றில்லாதார்'' என்கிறபடியே இம்மஹோபகாரத்துக்குத்தோற்று ''உனக்கென்செய்கேன்'' என்று பரிவர் ''కిమివశ్రీనిధే విద్యతే మే'' ''கிமிவஶ்ரீநிதேவித்யதேமே'' என்று சொல்லும்படி இவ் விஷயத்திலே அகிஞ்சநனான நானென்னத்தைச்செய்வது என்று நெஞ்சாறல்பட்டு கிஞ்சித்காரத்திலே மீளும்படி பண்ணக்கடவதான ப்ரேமமின்றிக்கே யிருப்பான். பரிவாவது-பக்ஷபாதம். இத்தால்-ப்ரேமத்தை நினைக்கிறது. ''భూయోనాథే మమతుశతధావర్ధతా మేష భూయః'' ''பூயோநாதேமமதுஶததாவர்த்ததாமேஷபூயः'' என்று அளவுடையார் ஆசார்யவிஷயத்திலே ஆஶாஸிக்கிற ப்ரேமத்தைக் காணும் இவன் பண்ணுதொழிகிறது. ப்ரேமமின்றியிலே யொழிந்தாலும் இவன் தன்னுடைய ஜ்ஞாநவிஶேஷத்

தாலே உஜ்ஜீவிக்கக்குறையென்னென்ன (சிர்த்தவித்யாதி) "తజ్జ్ఞానమ్" "தத்ஜ்ஞாநம்" என்றும் "தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்றும் சொல்லுகிறபடியே - ஸ்ரீயஃபதியான ஸர்வேஶ்வரனை யுள்ளபடியறிவிக்கப்பற்றுகையாலே கனத்திருப்பதாய், "నహిజ్ఞానేన సదృశంపవిత్రమిహవిద్యతే" "நஹிஜ்ஞாநேநஸத்ர்ஶம்பவித்ரமிஹவித்யதே" என்னும்படி ஶ்லாக்யதரமாயிருந்துள்ள ஜ்ஞாநமெல்லாம் தன்னிடத்திலே கூடுபூரித்துக்கிடந்தாலும். "అర్థేనైవవిశేషోహినిరాకారతయాధియామ్" "அர்த்தேநைவ விஶேஷோஹிநிராகாரதயாதியாம்" என்கிறபடியே-ததர்த்த விஷயமாக ஜ்ஞாநத்துக்கு விஷயபேதாயத்தமான ஸ்வரூபபேத முண்டாகையாலே (ஞாநமெல்லாம் சேர்ந்தாலும்) என்கிறார். (சேர்ந்தாலும்) என்று யத்யாலிங்கிதமாகச் சொல்லுகையாலே, தத்தத்ஶாஸ்த்ர ஜந்யமான ஜ்ஞாநமானது, "ఆత్మనోనాత్మకల్పస్య స్వాత్మేశానన్యయోగ్యతామ్। కృతవన్తంనయోవేత్తి కృతఘ్నోనాస్తితత్సమః" "ஆத்மநோநாத்மகல்பஸ்ய ஸ்வாத்மேஶாநந்ய யோக்யதாம் - க்ர்தவந்தம் நயோவேத்தி க்ர்தக்நோநாஸ்திதத்ஸமஃ" என்னும்படி ஸ்வாசார்யவிஷயத்தில் க்ர்தஜ்ஞதையன்றிக்கே க்ர்தக்நனான விவனுக்கொருக்காலும் உண்டாகாது; உண்டானாலும் கார்யகரமன்றென்னு மிடந் தோற்றுகிறது

கார்யகரமாகாதபடி யெங்ஙனேயென்ன (கார்த்த இத்யாதி) அந்த ஜ்ஞாநத்தைப் பெற்றும் அவன் அதற்ப திக்கையாலே யென்கிறார். (கார்த்தகடல் மண்ணின்மேல் துன்புற்று மங்குமே) ஏவம்பூதனான விவன், "సాగరమేఖలామ్" "ஸாகரமேகலாம்" என்கிறபடியே - நீர்ச்செறிவாலே கார்போலே கறுத்துத் தோற்றுகிற கடலாலே சூழப்பட்ட இந்த பூமியிலே தானே; "అత్యుత్కటైః పుణ్యపాపైరిహైవఫలమశ్నుతే" "அத்யுத்கடை: புண்யபாபைரிஹைவ பலமஶ்நுதே" என்கிறபடியே; " இங்கே காணவிப்பிறப்பே மகிழ்வர்" என்கிறதுக் கெதிர்த்தட்டாக, ஐஹிகத்திலேதானே அனைவரும் நேராகக் காணும்படி, இனியிதுக்கவ்வருகில்லை என்னும்படியான நிரவதிகதுக்கத்தை யநுபவித்து, "క్లేశాదుత్క్రాన్తి మాప్నోతి యామ్యకింకరపీడితః" "க்லேஶாதுத்க்ராந்தி மாப்நோதியாம்ய கிங்கரபீடிதஃ" என்கிறபடியே - உத்க்ரமண தஶையில் யமதூதராலே யிழுப்புண்டு, ம்ர்த்யுபரவஶனாய் நஶிக்கும். (கார்த்த கடல்) என்கிறவிடத்தில், த-சாரியைச் சொல்லாய், கார்க் கடலென்றபடி. (துன்புற்று) இவனநுபவிக்றகிஆத்யாத்மிகாதி துக்கங்கள்தான், "எண்ணாராத்துயர்" என்னும்படி - அஸங்க்யாதங்களா யிருக்கையாலே, அவற்றைத் தனித்தனியே பரிகணித்துச் சொல்லில் பணிப்படுமென்று, ப்ரயோஜகத்தாலே சொல்லுகிறார். (மங்குமே)

மங்குதல் - நசித்தல். அவன் நசிப்பனோ நசியானோ என்று பயம்வேண்டா, நசித்து விடுவனென்கிறார்.

இவனிப்படி ஐஹிகத்தில் துக்கித்தானே யாகிலும் ஆமுஷ்மிகத்தில் ஸுகித்திருப்பனோ வென்ன (தேங்காமல் இத்யாதி) ஒரிடத்திலு மிவன் ஸுகித்திரானென்கிறார். (தேங்காமல் நண்ணுமே கீழாம் நரகு) இங்ஙன் மங்கின விவன் யமலோகத்திலே சென்று, யாதநாஶரீரத்தை பரிக்ரஹித்து, "இன்பமில் வெந்நரகாகி" என்கிறபடியே - ஸுகமிஶ்ரமன்றிக்கே நிஷ்க்ருஷ்ட துக்கமேயான நரகத்தை ஸர்வகாலமு மிடைவிடாமல் அநுபவித்துக்கொண்டு போரக்கடவன். அன்றிக்கே, துன்புற்று மங்கின விவனுக்குக் கரையேற்ற முண்டோ வென்ன (தேங்காமல் இத்யாதி) ஒருக்காலும் ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே நின்று கரையேற்ற மில்லையென்கிறார்.

(தேங்காமல் நண்ணுமே கீழாம்நரகு) இவனிப்புடைகளிலே துன்புற்று மங்கின வநந்தரம், யமலோகத்திலே சென்று, யாதநாஶரீரத்தை பரிக்ரஹித்து, நரகாநுபவம் பண்ணுவது; "అథైతమేవాధ్వానం పునర్నివర్తన్తే। అథైతమాకాశమ్। ఆకాశాద్వాయుః। వాయుర్భూత్వా ధూమోభవతి। ధూమోభూత్వాఅభ్రంభవతి। అభ్రంభూత్వా మేఘోభవతి। మేఘోభూత్వాప్రవర్షతి" "அதைத மேவாத்வாநம் புநர்நிவர்த்தந்தே - அதைதமா

காஶம் - ஆகாஶாத்வாயும் - வாயுர்பூத்வா தூமோபவதி - தூமோபூத்வா அப்ரம்பவதி - அப்ரம்பூத்வா மேகோபவதி - மேகோபூத்வா ப்ரவர்ஷதி" இத்யாதியாலே - பஞ்சாக்நி வித்யையிற் சொல்லுகிறபடியே இஶ்ஶரீரத்தைப் பொகட்டு ஸூக்ஷ்மஶரீரத்தோடே நிராலம்பநமான ஆகாஶத்திலே ஸஞ்சரிப்பது; ஆதித்யன் தன் கிரணங்களால் உபாத்தமான ஹிமத்தாலே ஆகாஶத்திலே மங்கிக்கிடக்கிற தண்ணீ மேகத்திலே புகுரவிட அது தன்னில் புக்கிருப்பது; அந்த ஜலம் ஸஸ்யத்துக்கு ஆதாரமாய்ப் புகுமளவிலே தத்த்வாரா ஸஸ்யத்திலே புகுவது; அந்தஸஸ்யம் பக்வமாய் அந்நமாய் பரிணமிக்குமளவிலே தத்த்வாரா புருஷஶரீரத்திலே புகுவது; அந்த அந்நமானது ஶுக்லமாய்ப் பரிணமிக்குமளவிலே ஶுக்லத்வாரா ஸ்த்ரீஶரீரத்திலே ப்ரவேஶிப்பது; பின்பு கர்ப்பமாய் பரிணமிப்பது; அங்கே கிடக்கும்போது மாதர்போஜநாந்தர்பூதங்களான தீக்ஷ்ணோஷ்ண த்ரவ்யங்களாலே (க) துடரிலிட்ட ஈயம்போலே துடிப்பது; இந்த க்லேஶத்தோடே கர்ப்பதுன்பமாகிற பையிலே கட்டுண்டு அவயவங்களை நீட்டவும் முடக்கவும் மாட்டாதே கிடப்பது; க்லேஶத்தோடே மாதர் கர்ப்பத்தில் நின்றும் நிஷ்க்ரமிப்பது; பால்யதஶையிலே அஶுசி (உ) ப்ரஸ்தரங்

(க) துடர் - ஈயமுருக்குகிற ஓடு. (உ) ப்ரஸ்தரம் - ப்ரதேசம்.

களிலே வஸிப்பது ; ஸ்வாதந்த்ர்யேண ஒருப்ரவர்த்தியையும் பண்ண க்ஷமனன்றிக்கே யொழிவது ; பின்னையுமிவையோடே காலத்தைப் போக்குவது ; யௌவநத்தில் நரகஹேதுவான விஷயாந்தரங்களையே விரும்புவது, (க) காலத்ரயத்திலும் (உ) கரணத்ரயத்தாலும் துஷ்கர்மங்களையே ஆசரிப்பது, (ங)ஆஶாத்ரயத்தாலே அலமாவது, (ச) தாபத்ரயத்தாலேதப்தனாவது, (ரு) ஈஷணத்ரயத்தாலே ஈடுபடுவது, (சு) அபராதத்ரயத்தை ஆர்ஜிப்பது, ஜரையிலே அஶக்தனாய்க்கொண்டு மிகவும் தளருவது, நினைவின்றிக்கே மரணத்தை ப்ராபிப்பது ; பின்னை உத்க்ரமண க்லேஶத்தை யனுபவிப்பது ; புநஶ்ச, மர்த்யுபரவஶனாய்க் கொண்டு "మరణంజననోజన్మ మరణాయైవకేవలమ్" "மரணஂஜநநோ ஜந்மமரணாயைவகேவலம்" என்கிறபடியே- இப்படி இடைவிடாதே நடந்து செல்லுகிற ஸம்ஸாரமாகிற *விடியாவெந்நரகத்திலேயழுந்தி ஒருநாளும் கரையேற்ற மின்றிக்கே நித்யஸம்ஸாரியாய்ப்போரக்கடவன். (கீழாம்நரகு) "நீள்நிரயம்" என்கிறபடியே - ஒருகால விஶேஷத்திலே கரையேற்றமுடைத்தான யமதண்டமா

ப (க) காலத்ரயம் - பூத பவிஷ்யத் வர்த்தமானங்கள். (உ) கரணத்ரயம் - மனோவாக்காய கரணங்கள். (ங) ஆசாத்ரயம் - அஹங்கார மமகார விஷயப்ராவண்யங்கள். (ச) தாபத்ரயம் - ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிகங்கள். (ரு) ஈஷணத்ரயம்-அர்த்தேஷண புத்ரேஷண தாரேஷணங்கள். (சு) அபராதத்ரயம்-பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசாரங்கள்.

கிற நரகம்போலன்றிக்கே, ஒருகாலவிஶேஷத்திலும் கரையேற்றமில்லாதபடி நெடுகச் செல்லாநிற்கிற நரகமிறே யிஸ்ஸம்ஸாரம். (நண்ணுமே கீழாம்நரகு) ஏவம் பூதமானவிந்நரகத்தைக் கடக்கப்பெறுதே, யாவதாத்மபாவியாக அழுந்தியிருப்பன்.

நாலாம்பாட்டு.—பின்னையும், ஸிம்ஹாவலோகநந்யாயேந இரண்டாம் பாட்டைக் கடாக்ஷித்தருளி, அதிலேநிர்த்தேஶித்த அஞ்சுபொருள்தானின்னதென்றும், அதுதானிவ்விடத்திலே ப்ரதிபாதிக்கப்பட்டதென்றுமருளிச்செய்யாநின்றுகொண்டு, ஏவம்பூதமான இவ்வர்த்தபஞ்சகத்தைத் தன்னுடைய பரம க்ர்பையாலே உபதேஶித்த ஆசார்யன் பக்கலிலே ப்ரேமமற்றிருக்குமவன், விஷத்திலுங் காட்டில் அதிக்ரூரனென்கிறார்.

ஷ.—தன்னையிறையைத் தடையைச் சரணெறியை
மன்னுபெருவாழ்வை யொருமந்திரத்தி - னின்னருளால்
அஞ்சிலுங்கேடோடவளித்தவன் பாலன்பிலார்,
நஞ்சிலுங்கேடென்றிருப்பன்நான்.

ப-ரை.—ஒருமந்திரத்தின் - பெரியதிருமந்த்ரத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டிருந்துள்ள, தன்னை - மகரவாச்யமான சேதநஸ்வரூபமும், இறையை - அகாரவாச்யமான பரஸ்வரூபமும், தடையை - ஷஷ்ட்யந்த மகாரோக்தமான விரோதிஸ்வரூபமும், சரண்நெறியை - அகண்டநமஃபதோக்தமான உபாயஸ்வரூபமும், மன்னுபெருவாழ்வை-ஸவிபக்திக நாராயணபதோக்தமான கைங்க

யமாகிற புருஷார்த்தஸ்வரூபமும் ஆகிற, அஞ்சிலும் - அர்த்த பஞ்சகத்திலும், கேடு - அஜ்ஞாந அந்யதாஜ்ஞாநாதிகளெல்லாம், ஓட - வாஸநையோடே போம்படி, இன்அருளால் - பரமக்ருபையாலே, அளித்தவன்பால் - உபதேசித்த ஆசார்யன் பக்கல், அன்புஇலார் - ப்ரேமம் இல்லாதவர்கள், நஞ்சிலும் - விஷத்தைக்காட்டிலும், கேடு-மிகவும் க்ரூரர், என்று-என்று நினைத்து,நான் — இருப்பன் - அதுவே யாத்ரையாயிருப்பேன் என்கிறார். . . (சு)

(தன்னை) இத்யாதி. ஆதரத்தில் * பௌநஃபுண்ணிய மலங்க்ரியா யிருக்கும்போலே காணும். (தன்னையிறையை) இத்யாதிகளில் த்விதீயையை ப்ரதமையாக்கி, திருமந்த்ர ப்ரதிபாத்யமாயிருந்துள்ள ஸ்வஸ்வரூபாதிகளாகிற ஐந்திலும் - கேடோட வளித்தவன் என்றந்வயிக்கவுமாம். அன்றிக்கே, மந்திரத்தினைந்திலும் வைத்துக்கொண்டு - தன்னை யிறையைத் தடையைச் சரணெறியை மன்னுபெருவாழ்வை - கேடோட வளித்தவன் என்று அந்வயிக்கவுமாம். "ஶ்ஸ்யாஸ்மி" "யஸ்யாஸ்மி" இத்யாதிகளை யுட்கொண்டு பரஸ்வரூபம் முன்னாக அர்த்தபஞ்சகத்தை நிர்த்தேஶித்தார்-முதற்பாட்டில்; பிள்ளையருளிச்செய்த அர்த்தபஞ்சக ரஹஸ்யத்தை யுட்கொண்டு, ஸ்வஸ்வரூபம் முன்னாக அர்த்தபஞ்சகத்தை நிர்த்தேஶிக்கிறார் இதில். (தன்னை) திருமந்த்ரத்தில் ப்ரதமபதமான ப்ரணவத்தில் பகவச்சேஷத்வாஶ்ரயமாக மகாரத்தாலே ப்ரதிபாதிக்கப்படுகிற தானும். (இறையை) தனக்கு வகுத்தஶேஷியாக ப்ரதிபாதிக்கப் படுகிற அகாரவாச்ய

னை எம்பெருமானும். (தடையை) தானவனைப்பற்றுமிட த்தில் இடைச்சுவராக த்விதீயபதமான நமஸ்ஸில்ஷஷ்ட் யந்த மகாரோக்தமான விரோதியும். (சரணெறியை) அப்படியே தான் அவனைப்பெறுகைக்கு நிரபாயோபாய மாக அகண்டநமஃபதோக்தமான ஶரணாகதியும். (மன்னு பெருவாழ்வை) இஶ்ஶரணாகதி லப்யமான ஸவிபக்திக நா ராயணபதோக்தமான கைங்கர்யமாகிற நித்யபுருஷார்த் தமும்.

(ஒருமந்திரத்தின்) இப்போது படுந்துறை இது ஒன் றுமேபோலேகாணும்; மற்ற வ்யாபகத்வயத்துக்கும் இப் பேறுபாடில்லையிறே. (ஒரு) இவ்வர்த்தவிஶேஷங்களை ப்ர திபாதிக்கக் கடவதாயும், ப்ரபந்நனுகிற ப்ரமாதாவுக்கு அர்ச்சாவதாரமாகிற ப்ரமேயத்தை யறிவிக்கும் ப்ரமா ணமாயும், ஸர்வோபாயஶூந்யர்க்கு ஸர்வஸ்வம்மாயும், அந்தனுக்கும் அஶக்தனுக்கும் வைத்த தண்ணீர்பந்தலா யும், ஸம்ஸார விஷதஷ்டனுக்கு ஸித்தௌஷதமாயும், அதநனுக்கு நிதியாயும், எம்பெருமானைப்பற்று மதிகா ரிக்கு மங்களஸூத்ரமாயும், ஒருபாகவத நியமனத்தை வெறுத்தல் மறுத்தல்செய்யாதே அது போக்யமென்றி ருக்கையாகிற பலஜ்ஞானத்தை யுண்டாக்கக்கடவதாயும், தனக்கு ப்ராப்தி யணித்தாயிருக்கு மளவிலும் பகவத் விஷயத்தில் அபிநிவிஷ்டரான ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டு

தத்கிஞ்சித்காரத்துக்குறுப்பாக இங்குத்தை வாஸத்திலே ஒருப்படுகையாகிற பலயாதாத்ம்யஜ்ஞானத்தை விளைக்கக்கடவதாயும், ஜ்ஞாநப்ரதன் ஆசார்யன் என்னும் நினைவை ஜநிப்பிக்குமதாயும், ஜ்ஞாநவர்த்தகர் ஸ்ரீவைஷ்ணவர்களென்னும் ப்ரதிபத்தியைப் பிறப்பிக்குமதாயும், ஜ்ஞான விஷயம் எம்பெருமானென்னுமுணர்வை யுண்டாக்குமதாயும், ஜ்ஞாநபலம் பகவதநுபவ ஜநித ப்ரீதிகாரித கைங்கர்யமென்னுந் தெளிவைக் கொடுக்குமதாயும், அக்கைங்கர்யத்துக்கு சரமாவதி பாகவதகைங்கர்ய மென்னும் ப்ரதிபத்தியைப் பிறப்பிக்குமதாயும் போருகையாலே, "నమన్త్రోష్టాక్షరాత్పరః" "நமந்த்ரோஷ்டாக்ஷராத்பரஃ" என்றும், "నాస్తిచాష్టాక్షరాత్పరః" "நாஸ்தி சாஷ்டாக்ஷராத்பரஃ" என்றும் சொல்லுகிறபடியே - வாசகங்களில் தனக்கவ்வருகா யிருப்பதொன்றில்லாதபடி தனக்குள் நின்ற வஸ்துவைப்போலே அத்விதீயமாயாய்த்துப் பெரிய திருமந்த்ரந்தானிருப்பது. (ஒருமந்திரத்தின்) "మన్తారం త్రాయత ఇతిమన్త్రః" "மந்தாரம் த்ராயதஇதிமந்த்ரஃ" என்கிறபடியே - தன்னை யநுசந்திப்பா ரானேனுமாகவுமாம் அவர்களுடைய இஷ்டப்ராபணபர்யந்தமாயும், அநிஷ்டநிவாரணபர்யந்தமாயுமிருந்துள்ள ரக்ஷணத்தைப்பண்ணுமதாகையாலே, இத்தை மந்த்ரமென்கிறது. இப்படி இவ்வர்த்தபஞ்சகத்தை உபதேஶித்தது இத்தலையிலேதேனு

மொரு நன்மை கண்டோமென்ன (இன்னருளால்) அங்ங னன்றிக்கே, நிர்ஹேதுகமாக வென்கிறார். (இன்னருளால்) "பல்லாரருளும்பழுது" என்னும்படியான ஈச்வரனுடைய அருளிலும் அதிசயிதமாயிறே யிவ்வருள் தானிருப்பது. அது, ஸ்வதந்த்ரமாயும், பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாயுமிருக்கும் அவனுடைய வருள்; இது, பரதந்த் ரமாயும், மோக்ஷைகஹேதுபூதமாயு மிருக்கும் இவனு டைய வருள். (இன்னருளால்) "அருள்கண்டீரிவ்வுலகினில் மிக்கதே" என்கிறபடியே - இத்தலையில் ஏதேனுமொரு நன்மை யபேக்ஷியாத பரமக்ருபையாலே.

(அஞ்சிலும் கேடோட வளித்தவன்) இம்மந்த்ரப்ர திபாத்யமான அர்த்தபஞ்சகத்திலும் அஜ்ஞாநஸம்சய விபர்யயங்களறும்படி ஜ்ஞாநோபதேசம் பண்ணி யரு ளின ஸதாசார்யன் பக்கலிலே.

அஞ்சிலும் கேடோடவளிக்கையாவது - மகாரவாச் யமான சேதநஸ்வரூபம், ப்ரக்ருதேர் பரமாய், ஜ்ஞாநாநந் தலக்ஷணமாய், ஜ்ஞாநகுணகமாய், நித்யமாய், நிர்விகார மாய், அணுவாய், ஏகரூபமாய், பகவதநந்யார்ஹசேஷ மாயிருக்குமென்றும்; அகாரவாச்யமான பரஸ்வரூபம், லக்ஷ்மீஸநாதமாய், ஸமஸ்தகல்யாண குணாத்மகமாய், ஸ்வேதர ஸமஸ்த வஸ்துவிலக்ஷணமாய், த்ரிவிதபரிச்சேத

ரஹிதமாய், உபயவிபூதிநிர்வாஹகமாய், ஸர்வாபாஶ்ரய மாய், ஸர்வப்ரகாரத்தினாலும்ரக்ஷகமாய், ஶேஷியாயிருக்குமென்றும்; ஷஷ்ட்யந்தமகாரோக்தமான விரோதிஸ்வரூபம், தேஹாத்மாபிமாந ரூபமாய், தேவதாந்தர பரத்வபுத்தி விலக்ஷணமாய், ப்ராபகாந்தரோபாயத்வப்ரதிபத்யாத்மகமாய், கைங்கர்ய ஸ்வார்த்ததாபுத்திரூபமாய், ப்ராரப்தஶரீர ஸம்பந்தாத்மகமாய், ஸம்ஸாரவர்த்தகமாய், அஹங்கார மமகாரரூபமாய், அத்யந்தஹேயமாய், த்யாஜ்யமாயிருக்குமென்றும்; அகண்டநமஃபதோக்தமான உபாய ஸ்வரூபம், ஸித்தமாய், பரமசேதநமாய், ஸர்வஜ்ஞமாய், ஸர்வஶக்தியாய், ஸஹாயாந்தர நிரபேக்ஷமாய், ஸர்வபலப்ரதமாய், ப்ராப்தமாய், வ்யபிசாரவிளம்பவிதுரமாய், ஸ்வீகார விஷயபூதமாயிருக்குமென்றும்; ஸவிபக்திகமான நாராயணபதோக்தமான புருஷார்த்தஸ்வரூபம், அநுபவஜநிதப்ரீதிகாரிதமாய், ஸர்வதேஶஸர்வகால ஸர்வாவஸ்தோசிதமாய், பரம ப்ராப்யமாய், பரார்த்ததைகவேஷமாய், ஸ்வரூபாநுரூபமாய், ஸ்வார்த்ததாகந்தரஹிதமாய், நிரதிஶயபோக்யமாய், யாவதாத்மபாவியாயிருக்குமென்றும் வெளியிடாநின்றுகொண்டு: தேஹாத்ம ப்ரமம், ஸ்வதந்த்ராத்மப்ரமம், அந்யஶேஷத்வ ப்ரமம், பகவத்விஷயத்தில் அநீஶ்வரத்வ ப்ரமம், தேவதாந்தரபரத்வப்ரமம், தத்ஸமத்வப்ரமம், அஹங்கார மமகா

ராத்யுபாதேயத்வப்ரமம், ப்ராரப்தஶரீர ஸம்பந்த நித்ய த்வ ப்ரமம், தததநுபந்திஷு பந்துத்வப்ரமம், ஸ்வீகா ரோபாயத்வ ப்ரமம், கைங்கர்ய ஸ்வார்த்தத்வ ப்ரமம், தத்ஸ்வீகர்த்ர்த்வ ப்ரமம், ப்ராக்ர்திகமான அஜ்ஞாநாந் யதாஜ்ஞாநாதிகளெல்லாம் வாஸனையோடே போம்படி க்ர்பை பண்ணுகை.

(அளித்தவன்பா லன்பிலார்) இப்படி உபதேஶித்த ஸ்வாசார்யன் விஷயத்திலே, "యస్య దేవే పరా భక్తిర్యథా దేవే తథా గురౌ" "யஸ்யதேவேபராபக்திர்யதாதேவே ததாகுரௌ" என்று - அவஶ்யகர்த்தவ்யதயா விதிக்கப்பட்ட ப்ரேம மின்றிக்கே யிருக்குமவன்.

இப்படியிருந்துள்ள இவர்களை நீர் நினைத்திருப்பதெ ங்ஙனேயென்ன ; (நஞ்சிலுங் கேடென்றிருப்பன் நான்) நஞ்சுகேடு, இவர்கள் அதிலும்கேடு. ஹேயமாய் நஶ்வர மான ஶரீரத்தை ஸ்வபக்ஷணத்தாலே முடிக்கவற்றான விஷத்திலுங்காட்டில், உபாதேயமாய் நித்யமான ஆத்ம வஸ்துவை முடித்துக் கொள்ளுமவர்களாகையாலே, "నావక్రామతి సంసారాత్స ఖలు బ్రహ్మహా భవేత్" "நாவக்ராமதி ஸம்ஸாராத் ஸகலுப்ரஹ்மஹாபவேத்" என்று - மஹாபாதகியாகச் சொல்லப்படுகிற நித்யஸம்ஸாரியோபாதி, அதிக்ரூரரெ ன்று அறுதியிட்டாய்த்து நானிருப்பதென்கிறார். (இருப்

பன்நான்) என்று - ஸ்வப்ரதிபத்திவிசேஷத்தை யருளிச் செய்கிறார். (இருப்பன்) இவ்விருப்பி லெனக் கொருசலந மில்லை; இதுவேயாய்த்து யாத்ரை. (நான்) பிள்ளைலோகாசார்யருடைய விஷயீகாரத்தைப்பெற்ற வெனக்கு இவ்விருப்பு வந்தேறியாயிராதிறே.

ஆக, இம்மூன்றுபாட்டாலும் - அதிகாரநிஷ்டாக்ரம ப்ரகரணத்தில் "அஸஹ்யாபசாரமாவது-நிர்நிபந்தநமாக பகவத்பாகவத விஷயமென்றால் அஸஹமாநனா யிருக்கையும்; ஆசார்யாபசாரமும், அவையுண்டானாலும் இழவுக்கு அவர்கள்பக்கல் அபசாரமே போரும்; இவையொன்றுக் கொன்று க்ரூரங்களுமாய்" இத்யாதிகளிற் சொல்லுகிற அர்த்தவிஶேஷங்களை வெளியிட்டருளினாராய்த்து. ச.

அஞ்சாம்பாட்டு.—இப்படி உபதேஶ்யனான ஶிஷ்யனுக்கு ஸ்வாசார்ய விஷயத்தில் ப்ரேமமற்றிருக்கை ஸ்வரூபஹாநியான வோபாதி, உபதேஷ்டாவான ஆசார்யனுக்குத் தன்னிடத்தில் தன்னை மாறுடி நினைக்கையாகிற ஆசார்யத்வ ப்ரதிபத்தியும், ஶிஷ்யனிடத்திலே ஶிஷ்யனை மாறுடி நினைக்கையாகிற ஸ்வஶிஷ்யத்வ ப்ரதிபத்தியும், அப்படியே ஸஹஜதாஸ்யத்தை யுடையராயிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் பக்கலிலே ஜந்மநிரூபணமும், ஸ்வஸ்வரூப ஹாநியாய் விடுமென்கிறார்.

மூ.—என்பக்கலோதினாரின்னாரெனுமியல்வும்
என்பக்கல்நன்மையெனுமியல்வும்-மன்பக்கல்
சேவிப்பார்க்கன்புடையோர்சந்மநிரூபணமும்
ஆவிக்குநேரேயழுக்கு. ரு

ப - ரை.— என்பக்கல் - என்னிடத்திலே, இன்னார் - இன்ன வின்னவாகள், ஓதினார் - அர்த்தவிசேஷங்களை அதிகரித்தவர்கள், எனும் - என்கிற, இயல்வும் - துஸ்ஸ்வபாவமும்,என்பக்கல்-என்னிடத்தில், நன்மை-ஆசார்யத்வமாகிற நன்மை ய்ராகின்றது, எனும் இயல்வும்-என்கிறதுஸ்ஸ்வபாவமும், மன்பக்கல் - ஸர்வேச்வரன்பக்கலிலே, சேவிப்பார்க்கு - ஸ்நேஹபூர்வகமாக நித்யஸேவை பண்ணுமவர்களுக்கு, அன்பு உடையோர் - பரமஸ்நேஹிகளான ஸ்ரீவைஷ்ணவர்களிடத்தில், சந்மநிரூபணமும் - ஜாதிநிரூபணம் பண்ணுகையும், ஆவிக்கு - ஆத்மாவுக்கு, நேரே - நேர்கொடுநேர், அழுக்கு - நாசகமென்கிறார். .. .. .. .. .. .. .. (ரு)

(என்பக்கல்) இத்யாதி. (என்பக்கலோதினா ரின்னாரெனுமியல்வும்) சிலர் தன்பக்கலிலே ஜ்ஞாநோபஜீவநம் பண்ணுமளவில், "அறிவிலேன்" என்றும் "అజ్ఞోఽహం" "அஜ்ஞோஹம்" என்றும் "అజ్ఞానామగ్రగణ్యోఽహమ్" "அஜ்ஞாநாமக்ரகண்யஂமாம்" என்றும் சொல்லுகிறபடியே-தன்னை அஜ்ஞரில் தலைவனாகநினைத்து அவர்களும்தானும் "బోధయన్తః పరస్పరమ్"* "போதயந்த꞉பரஸ்பரம்" பண்ணினார்களாகபாதிபத்தி பண்ணியிராதே, என்னிடத்திலே யின்னாரின்னார் இவ்வர்த்த விசேஷங்களை அதிகரித்துப் போந்தார்களா

கையாலே அவர்களெனக்கு ஶிஷ்யராயிருப்பர்கள் என்று நினைத்திருக்கையிறே யிந்த துஸ்ஸ்வபாவம்.

அவ்வளவேயோ, (என்பக்கல் நன்மையெனு மியல்வும்) அப்படியே, தான் சிலர்க்கு ஜ்ஞாநோபதேஶம் பண்ணுமளவில், "என்முன்சொல்லும் மூவுருவா" என்றும் "శ్రోతృషు ప్రథమః-స్వమ్" "ஶ்ரோத்ருஷு-ப்ரதம꞉-ஸ்வம்" என்றும் சொல்லுகிறபடியே-ஸ்வாசார்யனை உபதேஷ்டாவாகவும், ஶ்ரோதாக்களில் தன்னைமுந்தின ஶ்ரோதாவாகவும், ஸ்வோபதேஶ்யரைத்தனக்கு ஸப்ரஹ்மசாரிகளாகவும் ப்ரதிபத்திபண்ணியிராதே, தன்னை இவர்களுக்கு உபதேஷ்டாவாகவும் அவர்கள் தனக்கு உபதேஶ்யராகவும் நினைத்து, நானின்னார்க்கின்னபடி அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணிக்கொண்டு போந்தேன் ஆகையாலே என்னிடத்தில் ஆசார்யத்வமாகிறநன்மை யிராநின்றது என்று நினைத்திருக்கையாகிற இந்ததுஸ்ஸ்வபாவமும். இயல்வு-ஸ்வபாவம். இந்நினைவையுடையவன் அஹங்காரதூஷிதனுகையாலே "డాంభికం క్రోధినం మూర్ఖం తథాహఙ్కారదూషితమ్। త్యక్తధర్మం చ విప్రేన్ద్ర గురుం ప్రాజ్ఞో నకల్పయేత్," "டாம்பிகம்க்ரோதிநம்மூர்க்கம் ததாஹங்கார தூஷிதம் - த்யக்ததர்மஞ்ச விப்ரேந்தர குரும்ப்ராஜ்ஞோநகல்பயேத்" என்கிறவசநத்திற்படியே-அவனை ஆசார்யனுக ப்ரதிபத்திபண்ணவொண்ணுதிறே.

அவ்வளவேயோ, (மன்பக்கல் சேவிப்பார்க்கன்புடையோர் சந்மநிரூபணமும்) அப்படியே, "பதிம்விஶ்வஸ்ய" "பதிம் விஶ்வஸ்ய" என்றும் "ஜகத்பதிம்" "ஜகத்பதிம்" என்றும் "நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்" என்றும் "இறைவா" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வஸ்வாமியான எம்பெருமான்பக்கலிலே, "ஸ்நேஹபூர்வமநுத்யாநம் பக்திரித்யபிதீயதே । பஜ இத்யேஷ தாதுர்வை ஸேவயா பரிகீர்த்திதः" "ஸ்நேஹ பூர்வமநுத்யாநம் பக்திரித்யபிதீயதே 'பஜஇத்யேஷதாதுர்வைஸேவயாபரிகீர்த்திதः" என்னும்படியான ஸ்நேஹபூர்வகமாக நித்யஸேவை பண்ணுமவர்களுக்கு, "நடையாவுடைத் திருநாரணன்றொண்டர் தொண்டர்" என்கிறபடியே-பரமஸ்நேஹிகளாய்க் கொண்டு அஶேஷ ஶேஷவர்த்திகளிலும் அந்விதராய் ஸஹஜ தாஸ்யத்தையுடையராயிருந்துள்ள ஸ்ரீவைஷ்ணவர்களிடத்திலே, "வைஷ்ணவோத்பத்தி சிந்தநம் । மாத்ருயோநிபரீக்ஷாயாஸ்துல்யமாஹுர்மநீஷிணः" "வைஷ்ணவோத்பத்தி சிந்தநம்।மாத்ர்யோநிபரீக்ஷாயாஸ்துல்ய மாஹுர்மநீஷிணः" என்று - மாத்ர்யோநிபரீக்ஷையோடொக்க ஶாஸ்த்ரங்களால் சொல்லப்படுகிற ஜந்மநிரூபணமும். ஜந்மநிரூபணமாவது - ஜாதிநிரூபணம், இது, குற்றத்துக்கும் இழவுக்கு முபலக்ஷணம். "பகவத்பக்திதீப்தாக்நி தக்ததுர்ஜாதிகில்பிஷः" "பகவத்பக்திதீபாக்நி தக்ததுர்ஜாதிகில்.

பிஷ:" இத்யாதிகளாலே - தபஃப்ரபாவத்தாலே விஶ்வாமித்ரனுக்கு க்ஷத்ரியத்வம் நிவர்த்தமானாப்போலே, பகவத்ப்ரஸாதத்தாலே துர்ஜ்ஜாதிநிவர்த்தமாமென்று சொல்லுகையாலே, அவர்கள்பக்கல் ஜந்மநிரூபணம், *அதஸ்மிம் ஸ்தத்புத்தியாயிறேயிருப்பது. (அன்புடையோர்) "நீதி உடையோர்" என்னுமாப்போலே, இதுக்கு மேற்பட்டிருப்பதொருஸம்பத் தில்லையிறே. (அன்புடையோர் சந்மநிரூபணமு மாவிக்கு நேரேயழுக்கு) மற்றையாரிடத்தில் ஜந்மநிரூபணம் யதாவஸ்திதவஸ்து விஷயமாகையாலே அழுக்கன்றுபோலே காணும்.

(சந்மநிரூபணமு மாவிக்கு நேரேயழுக்கு) கீழ்ச்சொன்ன விரண்டும் தேஜோத்ரவ்யமான ஆத்மவஸ்துக்களுக்கு பாகவதாபசாரத்தில் முற்பட பரிகணிதமான ஜ்ஞாநமயோமலஃ விதம் நேரேயழுக்கு. அன்றியே, ஸ்வாசார்யவிஷயத்தில்அன்பிலாமை "ஆத்மஜ்ஞாநமயோமலஃ" என்கிற ஆத்மவஸ்துக்களுக்கு இம்மூன்றும் நேரே அழுக்கென்னவுமாம். அங்ஙனுமன்றிக்கே, அஞ்சுபொருளு மளித்தவன்பா லன்பிலாமை நித்யமான ஆத்மவஸ்துவுக்கு நேர்கொடுநேர் நாஶகமானாப்போலே, என்பக்கலோதினரின்னுரெனு மியல்வு முதலான விம்மூன்றும் ஆத்மாவுக்கு நேர்கொடுநேர் நாஶகமென்னவுமாம். (நேரேயழுக்கு)

* அஹங்காரார்த்த காமாதிகளைப்போலே ஸத்வாரகமாக வன்றியே அத்வாரகமாகவே அழுக்கு. க்ரூரநிஷித்தம் என்னும்படியிறே யிவற்றின்கொடுமையிருப்பது.

ஆக, இப்பாட்டில் பூர்வார்த்தத்தாலே - ஆசார்யா நுவர்த்தநப்ரகரணத்தில் "தன்னை மாறுடி நினைக்கையாவது - தன்னை ஆசார்யனென்று நினைக்கை" இத்யாதியாலும், "மநஸ்ஸுக்குத் தீமையாவது - ஸ்வகுணத்தையும் பகவத் பாகவத தோஷத்தையும் நினைக்கை" இத்யாதியாலும், "பாகவதாபசாரந்தான் அநேகவிதம்; அதிலொன்று-அவர்கள் பக்கல் ஜந்மநிரூபணம்" இத்யாதியாலே-கீழ்ப்ரகரணத்தில் சொன்ன அர்த்தவிஶேஷங்களை யருளிச்செய்தாராய்த்து. ரு.

ஆறும்பாட்டு.—இப்படி ஆத்மநாஶத்தை விளைக்கக் கடவ இந்நாலுமே யாத்ரையாயிருக்கிற இஸ்ஸம்ஸாரிகள் நடுவே வர்த்திக்கிற நீர் இங்ஙன் உபதேசிக்கும்படி யிவற்றில் அகப்படாதே தப்பியிருந்தீரே! என்று பெரியபெருமாள் தாத்தக்கபடி இவை நேரே யழுக்கென்றறிந்தேனேயாகிலும் இப்படி இவை அடிமண்டியோடே கழிக்கவற்றான என் ஆந்தரதோஷத்தை, எனக்கு அஜ்ஞாதஜ்ஞாபகரான பிள்ளைலோகாசார்யரையும், தேவர்க்கு அபிதமரான எம்பெருமானாரையும், தேவருடைய பரமகர்

பையையும் கடாக்ஷித்துப் போக்கியருளவேணுமென்று விண்ணப்பஞ் செய்கிறார்.

மூ.—அழுக்கென்றிவையறிந்தேனம்பொனரங்கா
ஒழித்தருளாயுள்ளில்வினையை - பழிப்பிலா
வென்னாரியற்காகவெம்பெருமானார்க்காக
உன்னாருட்காகவுற்று. ௬.

ப-ரை.—அம் - அழகியதாய், பொன் - ஸ்ப்ர்ஹணீயமான, அரங்கா !- திருவரங்கப்பெருநகரிலே நித்யவாஸம்பண்ணு மவனே!, இவை - கீழ்ச்சொன்னவை யெல்லாம், ஆத்மவஸ்துவுக்கு, அழுக்கு என்று - அவத்யம் என்னுமத்தை, அறிந்தேன் - நன்றாக அறிந்தேன் ; பழிப்பு இல்லா - கீழ்ச்சொன்ன குற்றங்களொன்று மில்லாதவராய், என் ஆரியர்க்காக எனக்கு * அறியாதன வறிவித்த பிள்ளைலோகாசார்யர்க்காகவும், எம்பெருமானார்க்காக-எம்பெருமானார்க்காகவும், உன் - தேவரீருடைய, ஆர் .. பூர்ணமான, அருட்காக-க்ர்பாகுணத்துக்காகவும், அடியேனை, உற்று - அங்கீகரித்தருளி, உள்ளில் - ஜ்ஞானப்ரஸரணத்வாரத்தைப்பற்றி யிருக்கிற, வினையை - பாபத்தை, ஒழித்தருளாய் - போக்கி யருளவேணுமென்கிறார். ௬.

(அழுக்கென்று) இத்யாதி. (இவை-அழுக்கென்று-அறிந்தேன்) கீழ்ச்சொன்னவையடங்கலும், தேஜோத்ரவ்யமான ஆத்மவஸ்துவுக்கு நேரே அவத்யகரம் என்னுமிடத்தை "నారాయణోఽపి వికృతింయాతిగురోః ప్రచ్యుతస్యదుర్బుద్ధేః" "நாராயணோபிவிக்ர்தி௦யாதி குரோஃ ப்ரச்யுதஸ்யதுர்புத்தேஃ" இத்யாதிகளாலும், "என்று மனைத்துயிர்க்குமீரஞ்

செய் நாரணனு-மன்றும்தன்னாரியன்பாலன்பொழியில்" இத்யாதியான அருளாளப்பெருமா ளெம்பெருமானார் திவ்யஸூக்திகளாலும், "தான் ஹிதோபதேசம்பண்ணும்போது தன்னையும் ஶிஷ்யனையும் மாறாடிநினைக்கை க்ரூரநிஷித்தம்; பாகவதாபசாரந்தான் அநேகவிதம் அதிலே யொன்று-அவர்கள்பக்கல் ஜந்மநிரூபணம்" இத்யாதியான பிள்ளைலோகாசார்யருடைய திவ்யஸூக்திகளாலும், "వైష్ణవోత్పత్తిచిన్తనమ్ । మాతృయోనిపరీక్షాయాస్తుల్యమ్" "வைஷ்ணவோத்பத்தி சிந்தநம்। மாத்ர் யோநிபரீக்ஷாயாஸ் துல்யம்" இத்யாதி வசநங்களாலும், ஸம்ஶய விபர்யயங்களறும்படி விஶதமாகவும் பரோபதேசக்ஷமமாகவுமறிந்தேன்.

இவற்றின் தோஷப்பரப்பைத்தனித்தனியே யெடுத்துச்சொல்லப் புக்கால் பணிப்படும் என்று ப்ரயோஜநத்திலே இழிகிறார் (அம்பொனரங்கா) நானிவ்வறிவைப் பெறும்படி அழகியதாயும், மநோஜ்ஞமாயும், பாவநமாயுமிருந்துள்ள திருவரங்கப்பெருநகரிலே ஸ்தாவரப்ரதிஷ்டையாக விருந்து க்ர்ஷிபண்ணினவர் தேவரன்றோ (அம்பொனரங்கா) நானிவ்வறிவைப் பெற்றபின்பிறே "துயரறு சுடரடி" என்னும்படி தேவர்க்கு இவ்வழகும் இம்மநோஜ்ஞதையும் நிறம்பெற்றது. இவர்தான் திருவநந்தபுரத்திலே யெழுந்தருளியிருந்து இப்ப்ரபந்தத்தை

யிட்டருளினாரே யாகிலும், உருவுவெளிப்பாட்டின் மிகுதி யாலே (அரங்கா) என்று ஸம்போதிக்கும்படி பெரிய பெருமாள் இவர்க்கு முன்னிலையாய்த் தோற்றுகிறார்போலே காணும். (அம்பொனரங்கா ஒழித்தருளாய் உள்ளில் வினையை) தேவருடைய பாவநத்வத்துக்கும், தேவரைப் பற்றின வென்னுடைய அஶுத்திக்கும், *"అగ్నౌ నాసిఞ్చేత్"* அக்நிநாஸிஞ்சேத்போலே என்ன சேர்த்தியுண்டு. "தம்மையேநாளும்வணங்கித்தொழுவார்க்குத் தம்மையேயொக்கவருள்செய்வர்" என்று தத்வதர்ஶிகள் சொன்னபாசுரம் மதேகவர்ஜமாயிருப்பதொன்றோ? "செம்மையுடைய திருவரங்கர்தாம் பணித்த - மெய்ம்மைப்பெருவார்த்தை" என்னும்படி கையுமுழவுகோலும் பிடித்த சிறுவாய்க்கயிறுமான ஸாரத்ய வேஷத்தோடே திருத்தேர்த்தட்டிலே யெழுந்தருளி யிருந்து ஸ்வாஶ்ரிதனான அர்ஜுநனை வ்யாஜீகரித்து "సర్వపాపేభ్యో మోక్షయిష్యామి" "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று தேவர் சொன்ன வார்த்தை அர்த்தஸ்பர்ஶியா யிருப்பதொன்றன்றோ? "అనృతం నోక్తపూర్వం మే" "அந்ருதம்நோக்த பூர்வம்மே" என்றும் "న మే మోఘం వచో భవేత్" "நமேமோகம்வசோபவேத்" என்னும் தேவர்தாமே யருளிச்செய்கையாலே தேவர்க்கு அந்ருதத்தில் வ்யுத்பத்தியில்லை. (ஒழித்தருளாய்) இத்தலை அர்த்தியாதிருக்க பூர்வஜனாய்க்கொண்டு செய்யக்கடவ

தேவர்க்கு இத்தலை அர்த்தித்தால்ஆறியிருக்கப்போமோ? (அரங்கா வொழித்தருளாய்) பயிர்த்தலையிலே குடியிருப்பாரோபாதி, இத்தலையைக்*காக்கு மியல்வினராய், அவதாரம்போலே தீர்த்தம் ப்ரஸாதிக்கையன்றிக்கே நித்ய ஸந்நிதிபண்ணிக்கொண்டு போருகிற தேவர்க்கு இது தக்கோர்மையோ. (அருளாய்) நிர்க்ருணர்செய்யுமது அருளாளியானதேவர்க்குப் போருமோ. (உள்ளில்வினையை) உண்பார்மிடற்றைப் பிடிக்குமவனைப்போலே, "மநனகமலம்" என்னும்படி-ஜ்ஞாந ப்ரஸரணத்வாரத்தைப் பற்றியிறே இவ்வினை தானிருப்பது. (உள்ளில்வினையை) "உள்ளத்தேயுறையும்மாலை" என்கிறபடியே - *உள்ளேபதிகிடந்து ஸத்தையை நோக்குகிறதேவர்க்கு உள்ளிலுண்டான விரோதியைப்போக்கு கைபெரும்பணியோ. (ஒழித்தருளாயுள்ளில்வினையை)பாசியானது தெளிந்த ஜலத்தை யெங்குமொக்கப் பாரித்தாப்போலே இப்பரிவுக்கு திரோதாயகமாய்க் கொண்டு உள்ளே பிணையுண்டிருக்கிற பாபத்தைப் போக்கியருளீர்.

நீர் "ஒழித்தருளாய்" என்று இங்ஙன் உறைப்புத்தோற்றச் சொல்லுகிறதென்கொண்டென்ன (பழிப்பிலா) இத்யாதி. தேவர்க்கு அபிமதரா யிருப்பாரையும் தேவருடைய தகவையும் அண்டைகொண்டுகாணும் நானிவ்

வார்த்தை சொல்லுகிற தென்கிறார். (பழிப்பிலா என்ணுரியர்க்காக) கீழ்ச்சொன்ன குற்றங்களொன்றுமின்றிக்கேயிருந்து வைத்து ஸ்வாபதேஶமுகத்தாலே இவை யடங்கலுமாகாது என்று அறிவிலனென வெனக்கறிவித்த பிள்ளை லோகாசார்யர்க் காகவும். இப்பழிப்புத்தான் சிலநாளுண்டாய்க் கழிந்ததல்லாமையாலே, ததத்யந்தாபாவம் தோற்ற (பழிப்பிலா) என்கிறார். (என்னுரியன்) "ഗുരുംവാ ഋഭിമന്യതേ" "குரும்வாயோபிமந்யதே" என்கிற ஸ்வீகாரம் போன்ற ஸ்வீகாரமன்று. அவ்வளவேயோ, (எம்பெருமானார்க்காக) அதுக்குமேலே அவர்க்கு பரமஶேஷியாய், தேவர்க்கு அத்யந்தாபிமதராய், ஆசார்யபதத்துக்கு எல்லைநிலமாய், சரமார்த்தத்தை அனைவர்க்கும் தூளிதாநம் பண்ணியருளின எம்பெருமானார்க்காகவும். அவ்வளவேயோ (உன்னருட்காக) அதுக்குமேலே தேவர்க்கு அஸாதாரணநிரூபகமாய், மற்றைகுணங்களுக்கு அதிஶயாதாயகமாய், என்னளவிலேயாய் அகஞ்சுரிப்பட்டிராதே தேவரளவிலேயாய்க்கொண்டு கரைகட்டாக் காவேரிபோலேகரைபுரண்டிருக்கிற க்ருபாகுணத்துக்காகவும். உன்றன் ரக்ஷணஶக்தியிலே வந்தால் தேவரையும் விஞ்சிக்காணும் தேவருடைய க்ருபையிருப்பது. விரோதியில் பீதியாலும், தந்நிவ்ருத்தியி லுண்டானத்வரையாலும், அந்தரங்கரை முன்னிடில் பலம்சடக்கெனக்கை

புகுருமென்கிற த்வரையாலும் இங்ஙன்சொல்லுகிறுர். (உற்று) "గురుపరంపరదంపదన్తే" "குருபர०வரத०விதந்மே" என்றும், "రామానుజాఙ్ఘ్రిశరణోస్మి" "ராமாநுஜாங்க்ரிஶரணோஸ்மி" என்றும், "పితామహంనాథమునింవిలోక్య" "பிதாமஹ० நாதமுநி० விலோக்ய" என்றும், "என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" என்றும்சொல்லுகிறபடியே—ஏவம்பூதரான விவர்களுக்காகவும்அடியேனை அங்கீகரித்தருளி, என்னுடைய வுள்ளில்வினையையொழித்தருள வேணும். அல்லாவிடில், தேவர்க்கு ஆஶ்ரித பாரதந்த்ர்யமும் க்ர்பா பாரதந்த்ர்யமும் குலையுமிறே. என்னைப்பார்த்துச் செய்தருளுவதாக நினைத்திருந்தவன்றிறே தேவர்க்குக் *காலக்கழிவு செய்யலாவது.

ஆக, இப்பாட்டால் - பகவந் நிர்ஹேதுகக்ர்பாப்ரபாவப்ரகரணத்திலே "பேற்றுக்கடி-க்ர்பை" இத்யாதியாலும், "க்ர்பைபெருகப்புக்கால் இருவருடைய ஸ்வாதந்த்ர்யத்தாலும் தகையவொண்ணுதபடி யிருகரையுமழியப்பெருகும்" இத்யாதியாலும் சொல்லுகிற அர்த்தவிஶேஷங்களை யருளிச்செய்தாராய்த்து. (கூ)

ஏழாம்பாட்டு.—பலபடியாலும், ஆசார்யன்பக்கல் ப்ரேமமில்லாதவனுக்கு அதஃபதநமொழிய உஜ்ஜீவநமில்லையென்று சொல்லாநின்றீர், ஆசார்யப்ரேமம் கனத்

திருக்கு மவனுக்கு உஜ்ஜீவநமுண்டோ வென்ன; "தாளி ணையைவைத்த வவரை - நீதியால் வந்திப்பார்க்குண்டிழி யாவான்" என்று தத்வதர்ஸிகளாயிருப்பாரு மறுதி யிட்டார்களாகையாலே இப்படி யிருக்குமவனுக்கு உஜ் ஜீவநமுண்டென்று சொல்லாநின்றுகொண்டு இப்ப்ரபந்த த்தை நிகமித்தருளுகிறார்.

மூ. — தீங்கேதுமில்லாத்தேசிகன்றன்சிந்தைக்குப்
பாங்காகநேரேபரிவுடையோர் [ய்ச்
ஓங்காரத்தேரின்மேலேறிச் செழுங்கதிரினூடுபோ
சேருவரேயந்தாமந்தான். எ

ப-ரை.—தீங்கு- தன்ஆசார்யன்பக்கல் ப்ரேமமற்றிருக்கையாகிற பொல் லாங்கு, ஏதும் - சற்றேனும், இல்லா - இல்லாத, தேசிகன்தன் - ஸ்வாசார் யனுடைய, சிந்தைக்கு - திருவுள்ளத்துக்கு, பாங்காக - அநுகூலமாம்படி, நேரே - நேர்நொடுநேர், ஆநுகூல்யவர்த்தியைச்செய்து, அவன்பக்கலிலே, பரிவு உடையோர் - நிரவதிக ப்ரேமத்தை உடையவர்கள், ஓங்காரத்தேரின்மேல் ஏறி-ப்ரணவமாகிற தேரின்மேலேயேறி செழுங்கதிரினூடு- இரவிமண்டலத்தின் வழியே, அம் - அழகியதாய், தாமம்-ஸ்ரீவைகுண்ட நாதனுக்கு போகஸ்தாந மான வைகுந்தமாநகரை, போய்-அர்ச்சிராதிமார்க்கத்தாலே சென்று, சேரு வர்-கிட்டி இடைவிடாதேகைங்கர்யம் பண்ணப்பெறுவர் என்கிறார்.

ஏகாரம் - தேற்றம். "தேற்றம் வினாவே பிரிநிலே யெண்ணேயீற்றசை யிவ்வைந்தேகாரம்மே" என்றுஸூத்ரம். ... (எ)

(தீங்கேதுமில்லாத்தேசிகன்றன்சிந்தைக்கு) "தப்பில் குருவருளால்" என்றும் "தாழ்வாதுமில் குரவர்" என்

றும் "కామక్రోధవివర్జితమ్" "காமக்ரோதவிவர்ஜிதம்" என்றும் "అనఘమ్" "அநகம்" என்றும் சொல்லுகிறபடியே ஸ்வாசார்யன்பக்கல்ப்ரேமமற்றிருக்கையாதல், தன்பக்கலிலே சிலமினுக்கங்களை நினைத்திருக்கையாதல், ஶிஷ்யனுக்கு ஜ்ஞாநோபதேஶம்பண்ணுமிடத்தில் ஸாம்பக்ஷணுயிருக்கையாதல், க்ராமகுலாதிகளையிட்டு ஸ்ரீவைஷ்ணவர்களைத் தாழநினைக்கையாதல், ப்ராபகாந்தரங்களிலந்வயமாதல், ப்ராப்யாந்தரங்களில் ருசியாதல், ஜ்ஞாநாநுஷ்டாநங்களில் குறையாதல், ஆத்மகுணங்களில் வைகல்யமாதல், இவையாகிற பொல்லாங்கொன்றுமின்றிக்கே யிருப்பாணுய், "తత్సంప్రాప్తౌ ప్రభవతి తథా దేశికః" "தத்ஸம்ப்ராப்தௌ ப்ரபவதி ததா தேஶிகஃ" என்றும், "తత్సంప్రాప్తౌ వరవరమునిర్దేశికః" "தத்ஸம்ப்ராப்தௌ வரவரமுநிர்தேஶிகஃ" என்றும் சொல்லுகிறபடியே - தன்னைப்போலே அங்குத்தைக்குப்புதியரன்றிக்கே நிலமாய்க்கொண்டு தன்னையங்கே சேர்த்து விடக்கடவனுயிருந்துள்ள ஸ்வாசார்யன் திருவுள்ளத்துக்குத் தீங்கில்லாமையாகிற ப்ராபகாந்தரங்களிலந்வயம் துடக்கமான பொல்லாங்கில்லாமை. தீங்கேதுமில்லாமையாகிறது - ஸ்வாசார்யன்பக்கல் ப்ரேமமற்றிருக்கை துடக்கமான பொல்லாங்கில்லாமை. இத்தீங்கு ஒருகாலவிஶேஷத்திலே யுண்டாய்க் கழிந்ததன்றிக்கே, ஏதந்நிவர்த்திவித்தமாய்க்காணுமிருப்பது. (தேசிகன்றன்) ஸ்வதஃ

உத்தாரகத்வத்தால் வந்த ப்ராதாந்ய மிருக்கிறபடி. (சிந்தைக்குப்பாங்காக நேரேபரிவுடையோர்) இப்படிமஹோபகாரகனை ஸ்வாசார்யன் திருவுள்ளத்துக்கு அநுகூலமாம்படி "దద్యాచ్ఛక్తిత ఆదరాత్" "தத்யாச்சக்திதஆதராத்" என்றும், "ఆచార్యస్యస్థిరప్రత్యుపకరణధియా దేవవత్స్యాదుపాస్యః" "ஆசார்யஸ்ய ஸ்திரப்ரத்யுபகரணதீயா தேவவத்ஸ்யாதுபாஸ்யஃ" என்றும் சொல்லுகிற படியே - நேர்கொடுநேர் கிஞ்சித்காரமுமேந, "தேசாரும் சிச்சனவன் சீர்வடிவை-யாசையுடன் - நோக்குமவன்" என்கிறபடியே - தனக்கு அநுபாவ்யமான அவன்திருமேனியைப் பேணிக்கொண்டு அவன்பக்கலிலே நிரவதிகப்ரேமத்தை யுடையவன். (பாங்காக) ஶிஷ்யனுக்கு நிக்ரஹ காரணம் த்யாஜ்யமென்கையாலே அவனுக்கு ஸ்வரூபம் தத்ப்ரியத்வம் நடத்துகை ஒன்றும் போலேகாணும். (நேரே) ஆளிட்டந்திதொழவொண்ணாதவோபாதியும், மஹிஷீஸ்வேதத்துக்குஆளிடவொண்ணாத வோபாதியும், தான்செய்யக்கடவ அநுகூலவ்ர்த்தியை அந்யரையிட்டுச் செய்விக்க வொண்ணாதிறே. (பரிவுடையோர்) "యస్మాత్తదుపదేష్టాసౌ తస్మాద్గురుతరో గురుః । అర్చనీయశ్చవన్ద్యశ్చకీర్తనీయశ్చసర్వదా॥ ధ్యాయేజ్జపేన్నమేద్భక్త్యా భజేదభ్యర్చయేత్సదా । ఉపాయోపేయభావేనతమేవశరణంవ్రజేత్ ॥ ఇతిసర్వేషువేదేషు సర్వశాస్త్రేషుసమ్మతమ్" "யஸ்மாத்ததுபதேஷ்டாஸௌ தஸ்

மாத் குருதரோகுரு:அர்ச்சநீயஶ்ச வந்தயஸ்ச கீர்த்தநீய ஶ்சஸர்வதா· த்யாயேஜ்ஜபேந்நமேத் ।க்த்யாபஜேதப்யர்ச் சயேத்ஸதா।உபாயோ பேயபாவேந தமேவஶரணம்வ்ரஜே த்॥ இதிஸர்வேஷு வேதேஷு ஸர்வஶாஸ்த்ரேஷு ஸம்ம தம்" இத்யாதிகளாலே-ஸர்வகரணங்களாலும் ஸர்வப்ர காரங்களாலும், ஸர்வகாலமும். "సర్వంయదేవ" "ஸர்வம்யதே வ" என்கிறபடியே-ஸ்வாசார்யன் றன்னையே எல்லாமாக ப்ரதிபத்திபண்ணி, அவன்பக்கல்ப்ரேமயுக்தனாயிருக்கை யொன்றுமே ஶிஷ்யனுடையஜ்ஞாநபலமாகிறதென்றுசொ ல்லாநின்றதிறே. (பரிவுடையோர்) நிதியுடையோரென்னு மாப்போலே இதுதான்பெறுப்பேறாயிருப்பதொன்றிறே. "తత్రాపిదుర్లభంమన్యే వైకుణ్ఠప్రియదర్శనమ్" "தத்ராபிதுர்லபம்மந் யே வைகுண்ட ப்ரியதர்ஶநம்" என்றதிறே. (பரிவுடை யோர்)மேல்சொல்லுகிற புருஷார்த்தஸித்திக்கு வேண்டுவ தொன்றுமேயாய்த்து. இங்ஙன் பரிவுடையனான விவனு க்குஸித்திக்கப்புகுகிற பலந்தானேதென்ன(ஓங்காரத்தே ரின்மேலேறி) இத்யாதி. *வைகுந்தமாநகரன்றோ இவன் கையது என்கிறார். (ஓங்காரத்தேரின்மேலேறி) இப்படி ஸ்வாசார்யவிஷயத்திலேநிரதிஶயப்ரேமஶாலியானவின்ன, "வையம் மன்னிவீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூ டே" என்கிறபடியே - இங்கிருக்கும் நாள் ஸ்வவ்யாவ்ர் த்திதோற்றவும் ஸ்வரூபாநுரூப மாகவும், பரமபதமுங்

கூடத் தன்சிறுமுறிக்குச் செல்லும்படியாகவும், உபய வேதாந்த காலக்ஷேப ஸ்ரீயோடும் ததீயாராதந ஸ்ரீயோடும் உகந்தருளின நிலங்களில் மங்களாஶாஸந ஸ்ரீயோடும் தத்கைங்கர்ய ஸ்ரீயோடும் உடையவரைப் போலே நூற்றிருபதாண்டு குறைவு நிறைவுகளின்றிக்கேயிருந்து, ஶரீராவஸாநகாலத்திலே தடுத்தும் வளைத்தும் பெற வேண்டும்படியான பரமபக்திதலையெடுத்து *அந்தமில் பேரின்பத்தடியரோடொரு கோவையாயிருக்க வேணுமென்று ப்ராப்யத்வரைவிஞ்சி, * ஹார்த்தாநுக்ர்ஹீதனுய்க்கொண்டு ஹ்ர்தயகமலத்தினின்றும் புறப்பட்டு ஸுஷும்நையென்னும் பேரையுடைத்தான மூர்த்தந்ய நாடியாலே ஶிரக்கபாலத்தை பேதித்து, "ఓంకారరథమారుహ్య" "ஓம்காரரதமாருஹ்ய" என்கிறபடியே மநஸ்ஸுஸாரத்யம்பண்ண ப்ரணவமாகிற தேரின்மேலேயேறி. (செழுங்கதிரினூடுபோய்) அநந்தரம், "అర్చిష మేవాభిసంభవన్తి। అర్చిషోఽహః। అహ్న ఆపూర్యమాణపక్షమ్। ఆపూర్యమాణపక్షాద్యాన్ షడుదఙ్ఙేతి మాసాన్। మాసేభ్యస్సంవత్సరమ్ । సవాయుమాగచ్ఛతి" "அர்ச்சிஷமேவாபிஸம்பவந்தி । அர்ச்சிஷோஹஃ । அஹ்நஆபூர்யமாணபக்ஷம் । ஆபூர்யமாணபக்ஷாத்யாந் ஷடுதஞ்ஞேதிமாஸாந் । மாஸேப்யஸ் ஸம்வத்ஸரம் । ஸவாயுமாகச்சதி" என்கிறபடியே - முற்பட அர்ச்சிஸ்ஸைக்கிட்டி, பின்பு அ

ஹஸ்ஸையும் ஶாகல்பக்ஷாபி மாநியையும். உத்தராய ணாபி மாநியையும் ஸம்வத்ஸராபி மாநியையும் சென்றுகிட்டி, அவர்கள் பெரிய ப்ரீதியோடே வழிநடத்துகைமுன்னாக, "సఆదిత్యమాగచ్ఛతి" "ஸஆதித்யமாகச்சதி" என்றும், "ప్రవిశ్యచసహస్రాంశుమ్" "ப்ரவிஶ்யசஸஹஸ்ராம்ஶும்" என்றும் "தேராற்நிறைகதிரோன் மண்டலத்தைக்கீண்டுபுக்கு" என்றும் சொல்லுகிறபடியே - நெருங்கியிருந்துள்ள கிரணங்களையுடையனான ஆதித்யனுடைய மண்டலத்தை பேதித்துக்கொண்டு அவன் ஸத்கரிக்க அவ்வருகேபோய்ச்சென்று.

(சேருவரேயந்தாமந்தான்) அநந்தரம், "ఆదిత్యాచ్చన్ద్రమసమ్ । చన్ద్రమసోవిద్యుతమ్ । సవరుణలోకమ్ । సయిన్ద్రలోకమ్ । సప్రజాపతిలోకమ్ । సఆగచ్ఛతివిరజాంనదీమ్ । తంపఞ్చశతాన్యప్సరసాన్ ప్రతిధావన్తి । తంబ్రహ్మాలఙ్కారేణ" "ஆதித்யாச்சந்த்ரமஸம் - சந்த்ரமஸோவித்யுதம் - ஸவருணலோகம் - ஸஇந்த்ர லோகம்- ஸப்ரஜாபதிலோகம் - ஸஆகச்சதி விரஜாம்நதீம்-தம்பஞ்சஶதாந்யப்ஸரஸாந் ப்ரதிதாவந்தி-தம் ப்ரஹ்மாலம்காரேண" என்கிறபடியே அமாநாத்மகனான சந்த்ரனையும், ஆதிவாஹிக கோடியிலே பரிகணிதனான அமாநவனையும், ஸர்வாப்யாயகனான வருணனையும் த்ரைலோக்ய பாலகனான இந்த்ரனையும், முச்

தராய்ப் போருமவர்களை ஸர்வப்ரகாரத்தாலும் மிகவும் ஶ்லாகிக்கக்கடவனான ப்ரஜாபதியையும் சென்று கிட்டி, அவர்கள் ஸத்கரிக்கும் ஸத்காரம் முன்னாக அவ்வோ லோகங்களையுங்கடந்து, ஈஶ்வரனுக்கு க்ரீடாகந்துகஸ்தாநீயமான அண்டத்தையும், ஒன்றுக்கொன்று பத்துமடங்கான ஆவரணஸப்தகத்தையும், *முடிவில்பெரும்பாழான மூலப்ரக்ருதியையுங்கடந்து, முன்பு ஸம்ஸாரியான நாளில் தான்பட்ட விழுவெல்லாந்தீர இங்ஙன் ஸுகோத்தரமாந மார்க்கத்தாலே தனக்கு உபாயமான *பாரளந்தபாதபோதுபோலே கடுநடையிட்டுப்போய், அம்ர்தவாஹிநியான விரஜையிலே குடைந்து நீராடி, *வன்சேற்றள்ளலையும் வாஸநாரேணுவையும் விரஜாஸ்நாநத்தாலே கழியப்பெற்று, அவ்விரஜைக்கரையிலே ஶங்கசக்ரகதாதரனைக்கொண்டு எழுந்தருளியிருக்கிற அமாநவகரஸ்பர்ஶம் முன்னாக லாவண்ய ஸௌந்தர்யாதி கல்யாணகுணகரமாய் ஶுத்தஸத்வமயமாய் பகவதநுபவைகபரிகரமாய் * ஒளிக்கொண்டசோதியான விக்ரஹத்தையும் ஸ்வஸ்வரூபாவிர்ப்பாவத்தையும் பெற்று, பகவதாநுகூல்யைகபோகரான நித்யஸித்தராலே நெருங்கி, அவர்களாலுமளவிடவொண்ணாத அளவையும் ஐஶ்வர்யத்தையும் ஸ்வபாவத்தையுமுடைத்தான திவ்யதேஶத்தைக் * கண்களாரளவும்நின்றுகண்டு * கைகள் கூப்பித்தொழுது அமாநவ

பரிஸரத்தில் ஶங்க காஹள பேரீ ம்ர்தங்கங்களினுடைய முழக்கத்தைக்கேட்டு * ஓடுவார் விழுவார் போற்றுவார் புகழுவார் பூமழைபொழிவார் பாவாடை விரிப்பார் பாதங்கள்கழுவுவாராய்க்கொண்டுஎதிரே திரள் திரளாகப் புறப்பட்டுவருகிற நித்யமுக்தருடைய ஆநந்தகோலாஹலத்தை அநுபவித்துக்கொண்டுபோய், அவர்கள் எதிர்கொண்டு அலங்கரித்து ஸத்கரிக்கை முன்னாக, "స బ్రహ్మలోక మభిసంపద్యతే" "ஸப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே" என்றும் "அந்தாமம்" என்றும் "பொன்னுலகு" என்றும் சொல்லுகிறபடியே - ஸர்வப்ரகாரத்தாலும் ஸ்ப்ர்ஹணீயமாய் தன்னுடைய வரவாலே புதுக்கணித்து மிகவுமழகியதாய்க்கொண்டு, ஶ்ரீவைகுண்டநாதனுக்கு போகஸ்தாநமாயும், அவனுடைய செங்கோலே ஏகாதபத்ரமாய் நடத்தக்கடவதாயும், அவன் திருவடிகளிலே அஶேஷஶேஷவ்ர்த்திகளிலும் அந்விதமாகைக்கு ஏகாந்தமாயிருந்துள்ள *ஏர்கொள்வைகுந்தமாநகரத்தைச் சென்றுகிட்டி, "சுழிபட்டோடுஞ் சுடர்ச்சோதிவெள்ளத்தின்புற்றிருந்து" என்கிறபடியே - அம்ர்தஸாகராந்தர் நிமக்ந ஸர்வாவயவனாய்க்கொண்டு யாவத்காலமுமிருப்பன். (சேருவ[illegible]ர) இவ்வர்த்தத்தில்அசிர்ப்புப் பண்ணவேண்டுவதில்லை, [illegible]து சரதம்என்கிறார். "నసంశయో౽స్తి" "நஸம்ஶயோஸ்தி" என்றதிறே. (அந்தாமந்தான்) லீலாவிபூதியிலுங்காட்டில் நித்யவிபூதிக்குண்டான ப்ராதாந்யமிருக்கிறபடி.

ஆக, இப்பாட்டாலே-சரமப்ரகரணத்தில் "ஆசார்ய ஸம்பந்தம் மோக்ஷத்துக்கே ஹேதுவாயிருக்கும்" இத்யாதிகளால் சொல்லுகிற அர்த்தவிசேஷங்களை ப்ரதிபாதித்தருளினராய்த்து. ... ... எ.

ஆக, இப்ப்ரபந்தத்தால்-அர்த்தபஞ்சகஉபதேஷ்டாவே ஆசார்யனாகிறனென்னு மிடத்தையும், அவனிடத்தில் ப்ரேமமற்றிருப்பார் ஸ்வாத்மகாதகரென்னு மிடத்தையும், அவர்கள் ஜ்ஞாநவிசேஷ யுக்தரேயாகிலும் நித்ய ஸம்ஸாரிகளாய்ப் போருவரென்னு மிடத்தையும், அதுக்கு கர்த்தக்நரான விவர்கள் அதிக்ரூரரென்னு மிடத்தையும், ஸ்வோத்கர்ஷத்தைத்தேடுகை ஆசார்யனுக்கு அழுக்கென்னுமிடத்தையும், இவ்வழுக்குக்கடியான தோஷத்தைப் பெரியபெருமாள்தாமே தமக்குப்போக்கி யருளவேணு மென்னுமிடத்தையும், ஆசார்யன்பக்கல் ப்ரேமயுக்தனானவன் அர்ச்சிராதிமார்க்கத்தாலே பரமபதத்திலே சென்று மகதைஶ்வர்யத்தைப்பெற்று கைங்கர்ய ஸாம்ராஜ்யத்திலே மூர்த்தாபிஷிக்தனாய்க்கொண்டு யாவதாத்மபாவியாக விருப்பனென்னுமிடத்தையு மருளிச்செய்து நின்றாராய்த்து.

விளாஞ்சோலைப்பிள்ளை திருவடிகளேஶரணம்.

ஸப்தகாதை ஸம்பூர்ணம்.